# தமிழரசு





16-9-1992 ரூ.1

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்

ஆயத்த ஆடைகள்

கதர் பாலியஸ்டர்

பாப்டா

மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

குறளகம், சென்னை - 600 108.

DIPR/1642/MS/92



## இந்த இதழில்...


தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில்,
மாண்புமிகு முதல்வர் உரை ... 2

தந்தை பெரியார்
வாழ்க்கைக் குறிப்புகள் ... 6

குழந்தைகள் திரைப்படத் துவக்க விழா ... 9

பேரறிஞர் அண்ணா
வாழ்க்கைக் குறிப்புகள் ... 13

ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி ... 17

தருமபுரி மாவட்டத்தில் பழங்காலக்
கிராமிய நடனங்கள் ... 19

அரிய சிற்பம் கண்டுபிடிப்பு ... 21

தருமபுரி மாவட்டத்தில் அரசுத்
திட்டப் பணிகள் விளக்க முகாம் ... 24

விவசாயத்திற்குப் பயன்படும்
இயந்திரங்கள் ... 27

சென்னை தூய இருதய மகளிர்
மேல்நிலைப் பள்ளி ஆண்டு
விளையாட்டு விழாவில்
மாண்புமிகு முதல்வர் உரை ... 33

ஆசிரியர் தினவிழா ... 35

முன்னாள் மேயர் என். சிவராஜ் ... 37

வாழ்த்துவோம்! வணங்குவோம்! ... 41

டாக்டர் இராதாகிருஷ்ணன் ... 43

கண்ணைக் கவரும்
வண்ணப் பொம்மைகள் ... 45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆவணித் திங்கள் - 31

மலர்:23 இதழ்:6

16-9-1992



# தேசிய மக்கள் தொகைக் கொள்கையை மாற்றி அமைத்து நவீனப்படுத்தவேண்டும்:

## புதுடெல்லியில் நடைபெற்ற மக்கள் தொகை பற்றிய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை

மக்கள் தொகை மற்றும் குடும்ப நலம் பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் துணைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக முதல் அமைச்சரை இந்தத் துணைக் குழுவுக்கு நியமித்து இருப்பதை, குடும்ப நலத் திட்டங்களை வெற்றிகரமாக அமல் நடத்தி வரும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுக் கொள்கைகளுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.

நமது எல்லா வளர்ச்சித் திட்டங்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்தான் மையமாக அமைய வேண்டும். கட்டுப்பாடு இல்லாத மக்கள் தொகைப் பெருக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, திருப்திகரமான பொருளாதார வசதிகளை ஏற்படுத்தித்தர நமது பொருளாதாரம் இடம் தரவில்லை. இப்போதுள்ள மக்கள் தொகை மட்டும் அல்ல, எதிர்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி மதிப்பீடு நமது பொருளாதார வளத்திற்குப் பெரும் சுமையாகவே இருக்கும். உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மூலம் அடையும் பொருளாதார வளர்ச்சியின் சிறு பலன்களைக் கூட ஆண்டு தோறும் பெருகிக் கொண்டே போகும் மக்கள் தொகை வளர்ச்சி மூலம் நாம் இழக்க நேரிடுகிறது.

கடந்த 1976-ஆம் ஆண்டில் மத்திய அரசு தனது மக்கள் தொகைக் கொள்கையைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டது. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், குழந்தை பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டியதன் கட்டாயத்தையும் அது வலியுறுத்தியது.

5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,000 பேருக்கு 35 ஆக இருந்த குழந்தை பிறப்பு விகிதத்தை 6-வது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் (1980-இல்) 25 ஆகக் குறைத்திடவும் மத்திய அரசு கொள்கை அளவில் திட்டம் வகுத்து இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட குழந்தைப் பிறப்பு விகிதம் 1990-இல் 1,000 பேருக்கு 29.1 ஆகவே இருந்துள்ளது.

எட்டாவது திட்டக்கால இறுதியில், அதாவது 1997-ஆம் ஆண்டில், பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 26.7 ஆக இருக்கும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கு கூட



## நான் சாதாரண ஆள்தான் என்றாலும்...

நான் சாதாரண ஆள்தான் என்றாலும், உலகம் சுற்றியவன்; பூரண பகுத்தறிவுவாதி; சொத்து சம்பாதிக்க வேண்டிய அவசிய மில்லாதவன்; சொந்தத்திற்கும் பணம் சேர்க்க வேண்டிய தேவை யில்லாதவன்; சாதி உணர்ச்சி, சாதிப்பற்று இல்லாதவன்; என்ன செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டு மென்பவன்; 70 ஆண்டு உலக அனுபவம், 30 ஆண்டு வியாபார அனுபவம்.

- தந்தை பெரியார்.

நமக்கெல்லாம் பெரிய சவாலாகவே இருக்கிறது.

நமது மக்கள் தொகைக் கொள்கை, நம் குறிக்கோள்களை வெளிப்படுத்துவதாகவே மட்டுமே இருக்கக் கூடாது என்றே நான் கருது கிறேன். இந்த இயக்கம் தேசிய கிராம அளவில் அனைத்துத் துறைகளில் உள்ளவரையும் சாதி மத பேதமற்று அனைத்து மக்களையும் உள்ளடக்கி யிருக்க வேண்டும்.

பெருகி வரும் மக்கள் பெருக்கத்தால் நிலைமை மோசமாகத்தான் உள்ளது என்றாலும் நாம் நம்பிக்கையோடு இருக்கலாம். மக்கள் தொகைத் திட்டங்களை நாம் வெற்றிகரமாக அமல் நடத்தி வருவதே இதற்குக் காரணம்.

சில மாநிலங்கள் இதில் குறிப்படத்தகுந்த சாதனைகளை நிகழ்த்தி உள்ளன.

கேரளாவில் பிறப்பு விகிதத்தை 1990-இல் 1,000 பேருக்கு 19 ஆகவும் தமிழ்நாட்டில் 22.4 ஆகவும், ஆந்திராவில் 25.6 ஆகவும் குறைத்து இருப்பது குறிப்பிடத்தக்கது. குடும்பக் கட்டுப் பாட்டில் உள்ள பிரச்சினைகளைக் கருதும்போது இரு ஒரு சாதனையே ஆகும்.

உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 30 பேராக உள்ளது. இதில் உத்திரப்பிரதேசம் 1,000 பேருக்கு 35.7 பேர் என முதலிடத்தை வகிக்கிறது. இதை நன்கு உணர்ந்த மைய அரசு 1,000 பேருக்கு 40 பேர் பிறப்பு விகிதம் உள்ள 90 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு பிறப்பு விகிதத்தைக் குறைக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

எது எப்படி இருந்தாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த திட்டம் அமல் நடத்தப்படவேண்டும் என்பது எனது கருத்து ஆகும். இதுதான் இப் போதைய நமது தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலத் தகவல்கள் எல்லா மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உறுதியான திட்டமும், செயல் அளவிலான நடவடிக்கைகளும் தேவை. தேசிய மக்கள் தொகைக் கொள்கையை இதற்காகப் புதுப்பிக்க வேண்டும்.

தேசிய அளவில் இது குறித்து அனைத்துத் தரப்பினரும் விவாதித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

எங்கள் சொந்த மாநிலத்தில் இந்தப் பணி குறித்து ஆய்வு நடத்தினோம். தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தில் கடந்த 1990-இல் மிகக் குறைந்த அளவு பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 15.7 ஆக இருந்தது. கோவை மாவட்டத்தில் 17 ஆகவும், தர்மபுரி, தென் ஆர்க்காடு மாவட்டங் களில் பிறப்பு விகிதம் அதிக அளவிலான 1,000 பேருக்கு 23.6 ஆகவும் இருந்தது. தேசிய அளவைக் காட்டிலும் இது குறைவுதான்.

பெரியார் கோவை மாவட்டங்களில் வாழும் மக்களின் முன்னேறிய பொருளாதார நிலையும் பிறப்பு விகிதக் குறைவுக்குக் காரணமாக அமைந் துள்ளது. பெரும்பாலும் விவசாய மாவட்டங் களாக விளங்கும் தர்மபுரி, வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டங்களின் பிறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. அவை பின்தங்கிய மாவட்டங் களாகும். வளமான பொருளாதார நிலைமை, குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. அது சிறு குடும்பத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. குறுகிய காலக் கட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் பலன் தரும் என்றாலும் தொலைநோக்குப் பார்வையுடன் நாம் அணுகினால் நல்ல கல்வி, நல்ல பொருளாதார வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் வசதிகளைப் பெருக்குவது போன்றவைதான் சிறந்த பலன் களைத் தரும் என்பதையே இது காட்டுகிறது.

இது தொடர்பான வேறு சில விஷயங்களை இந்தக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். 1992 மே மாதம் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசும் போது, குடும்பக் கட்டுப்பாட்டு முயற்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள வெற்றிக்குப் பரிசீலிப்ப தற்குப் பதிலாக, கட்டுப்பாடுள்ள மூலதனப்

பொருட்களை வழங்குவது மறுக்கப்படுகிறது. மாற்றியமைக்கப்பட்ட காட்கில் திட்டப்படி தேசிய சராசரிக்குக் கீழ் தனிநபர் வருமானம் பெறும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப் படையாகக் கொள்ள வேண்டும். நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிதி ஒதுக்கீடு செய்யும்பொழு தும் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

மக்கள் தொகையைக் கட்டுபடுத்துவதில் சாதனைகள் புரிந்த மாநிலங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக 8-வது திட்ட மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்பநலத்திற்கான செயற்குழு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை, மாறாக சமுதாய பங்கேற் பினையே அது வலியுறுத்துகிறது. நாம் எதிர் பார்க்கும் பலன்களை அடைய தனிநபர் பங் கேற்பு மிகவும் முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்திற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகைகள் தவறாகப் பயன்படுத்தப்பட வில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், ஊக்கப் பரிசுகளுக்காகத் திட்டங்களை வகுத்துச் செயல்படலாம். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கே ஊக்கப் பரிசும், விருதும் போய்ச் சேரும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும். சமூகம் முழுமைக்கும் பயன்படும் வகையில் இந்த ஊக்கப் பரிசு அமைய வேண்டும்.

குடும்ப நலத்திட்டத்தில் குறிப்பிட்ட இலக்கை எட்டும் மாநிலங்களுக்குச் சிறப்புப் பரிசு வழங்கும் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தில் சமூகத்தின் அனைத் துத் தரப்புத் தலைவர்களையும் ஈடுபடுத்த வேண்டி யது அவசியம் ஆகும். குடும்ப நலத் திட்டத்துக்கு ஆதரவாக மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதற்காகக் கட்டாயக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்" என்று சொல்ல வில்லை.

ஒவ்வொரு தனி மனிதனையும் சந்தித்துச் சிறிய குடும்பத்தின் தன்மைகளை எடுத்துக்கூறி அதனால் வீட்டுக்கும், நாட்டுக்கும் என்ன பயன் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்காக வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும்.

முழு எழுத்தறிவு இயக்கத்தின் வெற்றியை நாம் முன் உதாரணமாகக் கொள்ள வேண்டும். முழு எழுத்தறிவு இயக்கத்தில் சமுதாயம் மொத்தமும், ஈடுபடுத்தப்படுவதைப்போல, அரசு மற்றும் தனி யார் துறையில் உள்ள நிபுணர்களின் ஒத்துழைப் புடன் நாடு முழுவதும் குடும்ப நலத்திட்டத்துக் கான இயக்கம் தொடங்கப்பட வேண்டும். அதில் தனி நபர்களும் சமுதாய மொத்தமும் ஈடுபடுத்தப் பட வேண்டும். இதுபோன்ற இயக்கம்தான் மக்கள் பெருக்க ஆபத்தை வெற்றிகரமாகச் சமாளிக்க உதவும்.



## அறிஞர் அண்ணா ஒரு மகத்தான சக்தி!

**"அண்ணா"**

**இந்தப் பெயர் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்கிறது.**

**இரும்புத் திரை போட்டு மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த அந்தச் சக்தி, மறைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக உரு வாகியிருக்கிறது.**

**இந்திய அரசியலில் ஜனநாயகத்தை முழு அளவில் நம்பியிருந்த, வளர்க்க விரும்பிய உண் மையான ஜனநாயக அரசியல் அறிஞர், அண்ணா அவர்களே.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

இது தொடர்பாக நான் தமிழ்நாட்டில் முழு நல்வாழ்வுக்கான செயல் திட்டத்தின் வெற்றிக் கதையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 6 மாதங்களில் 10 ஆயிரம் நல வாழ்வு முகாம்களை ஒவ்வொரு வாரமும் கிராம அளவில் நடத்தினோம். அப்போது டெட்டனஸ் தடுப்பு ஊசி போடுவது, முத்தடுப்பு ஊசி போடுவது, வைட்டமின் மாத்திரைகள் வழங்குவது போன்ற சேவைகள் இந்த முகாம் மூலம் வழங்கப்பட்டன. இந்த முகாம்களில் கலந்து கொண்டவர்களிடம் சிறு குடும்பங்களின் அவ்சியம் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

இந்த முகாம்களில் கலந்து கொள்வதற்கு மக்களிடையே பெரும் ஆர்வம் காணப்பட்டது. இந்த முகாம்களின் மூலம் சமுதாயத்துக்கு மிகுந்த பயன் கிடைத்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின் கீழ், மாவட்ட நிர்வாகம்குடும்பநலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கலாம்.

5 ஆயிரம் பேருக்கு ஒரு சமூகச் சேவகர் அல்லது செவிலியர் உள்ளனர்.

பலநோக்க சமூகச் சேவகர் பெரும் பங்காற்ற வேண்டி இருக்கும். சமூகச் சேவகர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்க வேண்

## 'அறிஞர்' பட்டம் பெற்ற வரலாறு:

1945-ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் நடந்த ஒரு கூட்டத்துக்கு அண்ணா சென்றிருந்தார். அக்கூட்டத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் திரு. செய்குத்தம்பிப் பாவலரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசும்போது கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றிற்கு அண்ணா புது விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் பொருத்தமுடைய தாகவே இருந்தது. அதைக் கேட்டுப் புலவர் செய்குத்தம்பி பாவலர் மிகவும் வியப்படைந்தார்.

கூட்டம் முடிந்ததும் அண்ணாவும், செய்குத் தம்பிப்பாவலரும் கம்பராமாயணத்தைப் பற்றிக் கலந்து பேசினார்கள். அப்போது செய்குத்தம்பிப் பாவலர், அண்ணாவின் கூரிய அறிவையும், சொற்போர் புரியும் ஆற்றலையும் அறிந்து வியந் தார். அண்ணா அவர்களுக்கு 'அறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கி மிகழ்ந்தார். அதன்பிறகு அண்ணாவை எல்லாரும் 'அறிஞர் அண்ணா' என்று அழைக்கலாயினர்.

பிற்காலத்திலோ அண்ணாவின் பேரறிவைக் கண்டு வியந்தவர்கள் அவருக்கு 'பேரறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கினார்கள். 'அறிஞர் அண்ணா' அவர்கள் 'பேரறிஞர் அண்ணா' என்று அழைக்கப்பட்டார்.

டும். அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்.

சமூகச் சேவகர்கள் மக்களின் சாதாரண நோய்களுக்கு மருந்துகளை இலவசமாக வழங்கப் போதுமான நிதியை மத்திய அரசு ஒதுக்க வேண் டும். இதன் பலனாகக் குடும்ப நலத் திட்டத்தில் மக்களை அதிக அளவில் ஈடுபடுத்தலாம்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் ஒரு முழுமை யான குடும்ப நலத் திட்டமாக (Total Family Welfare Programme) விளங்க வேண்டும். அது பல்வேறு உடல் நல அம்சங்களைப் பற்றிய கல்வி யைப் போதிக்க வேண்டும். நல்ல பொருளாதார வளர்ச்சிக்கும் குடும்ப நலத்திற்கும் உள்ள தொடர் பினை அனைத்து மக்களும் அறியும் வகையில் அரசு நிறுவனங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும்.

தேசிய மக்கள் தொகைக் கொள்கையை மாற்றி அமைத்து நவீனப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டு வசதியான வாழ்க்கை வாழ வழி வகுக்கும்படி இந்தக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும். எனவே, அனைத்து மட்டங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு ஊக்கப் பரிசுகள் அளிக்கப்பட வேண்டும்.

மாவட்ட அளவில் எல்லா அரசுத்துறை நிறு வனங்களையும் சம்பந்தப்படுத்தி மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதன் தலைவராக மாவட்ட ஆட்சித்தலைவர் இருக்க வேண்டும்.

குடும்ப நலத்திட்டம் பற்றித் தேசிய அளவில் அனைத்து மட்டத் தலைவர்களையும் ஈடுபடுத்தி விவாதம் நடத்தப்பட வேண்டும். அதில் மக்கள் நல்வாழ்வு அலுவலர்கள் தங்களுடைய பணியைச் சிறப்பாக ஆற்றிடப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

என் ஆலோசனைகள் மீது இந்த துணைக்குழு தக்க பரிசீலனை நடத்தும் என்று நான் நம்பு கிறேன்.

**—புதுடெல்லியில் 27.8.92 அன்று நடைபெற்ற, மக்கள் தொகை பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரை.**



## பெரியார் புரட்சி மொழிகள்

★ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.

★ பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.

★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

★ விதியை நம்பி மதியை இழக்காதே.

★ மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.

★ மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.

★ பிறருக்குத் தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.

★ பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை. ஒழுக்கம் இல்லாவிட்டால், எல்லாம் பாழ்.

★ தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய' வேண்டும்.



# தந்தை பெரியார் வாழ்க்கைக் குறிப்பு

**1879** - பெரியார் மாவட்டம், ஈரோட்டில் **17.9.1879** அன்று, வெங்கட்ட நாயக்கர்-சின்னத் தாயம்மை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

**1890** - பள்ளிப் படிப்பை விட்டு நிறுத்தப் பட்டு, மண்டிக்கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்டார்.

**1898** - பத்தொன்பதாம் வயதில் பதின்மூன்று வயது நாகம்மையைத் திருமணம் செய்து கொண்டார். இருபத்தொன்றாம் வயதில் ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார். அக்குழந்தை ஐந்து மாதத்தில் இறந்தது. பின்னர் குழந்தை இல்லை.

**1904** - இருபத்தைந்தாம் வயதில் தந்தையாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு துறவு பூண்டு, காசி, கல்கத்தா முதலான இடங்களுக்குச் சென்று பின் தந்தையாரால் அழைத்து வரப்பட்டார். வெங்கட்ட நாயக்கர் மண்டி, ஈ.வெ. இராமசாமி நாயக்கர் மண்டி என்று ஆயிற்று.

**1911** - தந்தையார் மறைவு.

**1914-1918** - காங்கிரஸ் மாநாடுகளை முன் நின்று நடத்தினார். ஈரோடு நகர் மன்றத்தலைவர் பதவியில் பல ஆண்டுகள் இருந்தார். சுமார் 28 கௌரவப் பதவிகள் வகித்தார்.

**1919** - நகர் மன்றத் தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டுக் காங்கிரசில் சேர்ந்தார்.

**1920** - கௌரவப் பதவிகளை ராஜினாமா செய்தார். காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

காந்தியடிகளின் சீடரானதும், ஆடம்பர ஆடையை விட்டுக் கதர் உடுத்தினார். எண்பது வயதுத் தாயார், மனைவி, மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களையும் கதர் உடுக்கச் செய்தார். திருச்செங்கோட்டில் கதர் ஆசிரமத்தைத் திறந்தார்.

மதுதரும் மரங்களை வெட்ட வேண்டும் என்று காந்தியடிகள் சொன்னபோது, சேலம் தாதம் பட்டியில் தன் தோட்டத்திலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

**1921** - தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக இருந்தார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை நடத்திச் சிறைவாசம் ஏற்றார்.

**1923** - தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார். ஈரோட்டில் பெரியார் இல்லம் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவல்கமாக மாறியது.

**1924** - இந்தியாவிலேயே முதன் முதலாகக் கேரளத்தில் வைக்கம் மகாதேவர் கோயில்முன் தீண்டாமை ஒழிப்புச் சத்யாக்கிரகம் நடத்தி இரு முறை சிறைப்பட்டார். 'வைக்கம் வீரர்' என்று போற்றப்பட்டார்.

**1925** - தமிழ்நாடெங்கும் காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றினார். 'குடியரசு' வார ஏட்டை ஈரோட்டில் தொடங்கி சுயமரியாதை உணர்வுகளைப் பரப்பினார்.






காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் தனது வகுப்புரிமைத் தீர்மானம் ஏற்கப்படாததால், காங்கிரஸிலிருந்து வெளியேறினார்.

1926 - சமுதாயத்தில் வர்ணாச்சிரமத்தை விரட்டுவதற்காகச் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார்.

1927 - ''வருணாச்சிரமம் ஒழிந்தால்தான் தீண்டாமை ஒழியும்'' என்று காந்தியடிகளிடம் வாதாடினார்.

1928 - 'ரிவோல்ட்' ஆங்கில ஏடு தொடங்கினார்.

1929 - முதல் மாநிலச் சுயமரியாதை மாநாட்டைச் செங்கல்பட்டில் கூட்டினார். கல்லூரி மாணவராக இருந்த பேரறிஞர் அண்ணா இதில் பார்வையாளராகக் கலந்து கொண்டார். டிசம்பரில் மலேயா நாட்டில் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார்.

மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டுச் சிறை சென்றனர்.

1930 - ஈரோட்டில் மாநில இரண்டாவது சுயமரியாதை மாநாடு கூட்டினார்.

1931 - விருதுநகரில் மாநில மூன்றாவது சுயமரியாதை மாநாடு கூட்டினார்.

1932 - இலங்கை, எகிப்து, ரஷியா, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுக்கல், இங்கிலாந்து முதலிய நாடுகளில் 11 மாதங்கள் சுற்றுப் பயணம் செய்தார்.

1933 - 'புரட்சி' வார ஏட்டின் மூலம் சம தர்மப் பிரச்சாரம் செய்தார். மனைவி நாகம்மையார் இயற்கை எய்தினார்.

1934 - 'பகுத்தறிவு' வார ஏட்டைத் தொடங்கினார். 'பகுத்தறிவு' தாளிதழையும் சிறிது காலம் வெளியிட்டார்.

1935 - நீதிக் கட்சிக்கு ஆதரவு அளித்தார். 'பகுத்தறிவு' மாத ஏடு துவக்கினார். திருப்பூர் மாநாடு ஒன்றில் பேரறிஞர் அண்ணாவைக் கண்டு, அவரது சுயமரியாதை உணர்வைப் பாராட்டினார்-

1936 - தாயார் மறைவு.

1937 - கட்டாய இந்தியை எதிர்த்துக் காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தினார்.

1938 - செப்டம்பர் 26 - கட்டாய இந்தியை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சி நடத்திச் சிறைவாசம் ஏற்றார். சிறையிலிருக்கும்போதே நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுயமரியாதை

இயக்கம் நீதிக்கட்சியுடன் இணைந்தது.

1938 - சென்னையில் டாக்டர் தருமாம்பாள் தலைமையில் கூடிய பெண்கள் மாநாட்டில் ''பெரியார்'' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1940 - பம்பாயில் டாக்டர் அம்பேத்கரை பேரறிஞர் அண்ணாவுடன் சந்தித்தார்.

1944 - ஆகஸ்டு 19 - சேலம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணாவின் தீர்மானத்தால் நீதிக் கட்சி, திராவிடர் கழகமாக மாற்றப்பட்டது.

1949 - ஜூலை 9 - மணியம்மையுடன் திருமணம். பேரறிஞர் அண்ணாவும், அவரது தோழர்களும் திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறினர்.

1950 - செப்டம்பர் 18 - பெரியாரின் பொன் மொழிகள் நூலுக்காக ஆறுமாதம் சிறைத்தண் டனை விதிக்கப் பெற்று, பத்து நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

1951 - வகுப்புரிமைக்காகக் கிளர்ச்சி நடத்தி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தச் செய்தார்.

1954 - பெருந்தலைவர் காமராசர் ஆட்சியை ஆதரித்தார்.

1967 - மார்ச் - பேரறிஞர் அண்ணா, தமிழக முதல்வரானதும், தந்தை பெரியாரைநேரில் சந் தித்து ஆசி பெற்றார். அதைப்பற்றிக் குறிப்பிடும் போது, ''நான் எவ்வளவோ அவர்களைத் திட்டி னேன். ஒரு வார்த்தை அவர்கள் திருப்பிச் சொல்ல வில்லை. அதிகாரம் கிடைத்தபோது, தந்தையிடம் மகன் வருவதுபோல, எந்த விதமான சங்கோஜ மும் இல்லாமல் வந்தார்கள். எனக்குத்தான் அவர்கள் முகத்தைப் பார்க்கவே வெட்கமாய் இருந்தது' என்று குறிப்பிட்டார் தந்தை பெரியார்.

1973 - டிசம்பர் 19 அன்று சென்னை தியாக ராய நகரில் ஆற்றிய சொற்பொழிவு அவரது இறுதிச் சொற்பொழிவு, அதுவே அவரது மரண சாசனம்.

டிசம்பர் 24 காலை 7.22 மணிக்குத்தந்தை பெரியார் தம் 95-ஆம் வயதில் மறைந்தார். அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

டிசம்பர் 25 - அரசு மரியாதையுடன் அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, தேக்கு மரப் பெட்டியில் வைக்கப்பட்டு மாலை 4.57 மணிக்கு, சென்னை பெரியார் திடலில் அடக்கம் செய்யப்பட்டது.



# நினைவில் பெரியார்

1974 - ஆம் ஆண்டில் தமிழக அரசு வாங்கிய கப்பலுக்கு 'எம்.வி. தமிழ்ப் பெரியார்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

1975 - ஈரோட்டில் பெரியார் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, பெரியார்-அண்ணா நினைவகமாக 17.9.1975 அன்று திறக்கப்பட்டது.

1978 - பெரியார் நூற்றாண்டு விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

செப்டம்பர் 17 அன்று மைய அரசு ஈரோட் டில் பெரியார் நினைவு அஞ்சல் தலையை வெளி யிட்டுச் சிறப்பித்தது.

பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு அமலாக்குவது பற்றிய அறிவிப்பை 18.9.1978 அன்று ஈரோட் டில் பெரியார் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்.

1979 - செப்டம்பர் 24 அன்று ஈரோட்டைத் தலைமை இடமாகக் கொண்ட பெரியார் மாவட் டத்தை அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

பெரியார் புரட்சி மொழிகள் அடங்கிய நினைவுத் தூண்கள் மாவட்டத் தலைமை இடங் களில் நிறுவப்பட்டன. ''பெரியார் புரட்சி மொழிகள்'' நூல் வெளியிடப்பட்டது. ''பெரியார் வாழ்க்கை வரலாறு'' ''பெரியார் வாழ்க்கைச் சித்திர நூல்'' வெளியிடவும், வைக்கத்தில் நினை வகம் எழுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1980 - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்ட பத்தில் பெரியாரின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.



# “குழந்தைகள் திரைப்பட விழாவை ஆண்டுதோறும் அரசே நடத்தும்!”

## குழந்தைகள் திரைப்பட விழாவைத் துவக்கிவைத்து மாண்புமிகு முதல்வர் உரை

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில், குழந்தைகள் திரைப்படத் துவக்க விழா 10.9.92 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுப் பெருமைப் படுத்திய இந்த விழா நிகழ்ச்சிகளைச் செய்தித்துறை இயக்குநர், திரு.க.கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தொகுத்து வழங்கினார். செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கத்தில் வரவேற்புரையாற்றினார்.

குழந்தைகள் சார்பில் சிறுமி உஷா வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்றும் விழாவின் தலைமை யேற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ.அரங்கநாயகம் - வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி ஆகியோருக்கும் சிறுவர் சிறுமிகளே பூச்செண்டு வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

**விளக்கேற்றித் துவக்கிவைத்தல்:**

தனக்கு மலர்ச்செண்டு வழங்கிய சிறுமிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்பு முத்தமிட்டார். போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமிகளுக்கு ‘மிக்கி மவுஸ்’ சின்னமுடைய நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் அளித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், குழந்தைகள் திரைப்பட

விழாவைக் குத்துவிளக்கேற்றித் துவக்கிவைத்தார்.

**வாழ்த்துரைகள் :**

**மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.**

**மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையுரையாற்றினார்.**

**முதல்வரின் விழாப் பேருரை :**

மாணவ மாணவிகளின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

''இன்று உங்களோடு கலந்து கொண்டு இருப்பதிலும் குழந்தைகள் திரைப்பட விழாவினைத் துவக்கி வைப்பதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டாவது அனைத்து நாட்டுக் குழந்தைகள் திரைப்பட விழாப் போட்டியை 1981-ஆம் ஆண்டில் நடத்தும் விருந்துபசரிப்பாளராகச் சென்னை மாநகரம் இருந்தது என்பதையும், அன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவ்விழா அமைப்புக் குழுவின் தலைவராக இருந்தார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, தற்போது தமிழ்நாட்டில் குழந்தைகள் திரைப்பட விழா இன்று மீண்டும் நடைபெறுகிறது.

இந்தக் குழந்தைகள் திரைப்பட விழா சென்னையில் மட்டுமல்ல மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற இதர நகரங்களிலும் இனி நடைபெறும்.

குழந்தைகள் திரைப்பட விழாவை நடத்துவதற்கு ஏதுவாக, குழந்தைகள் திரைப்படச் சங்கம் மூலம் தயாரிக்கப்பட்ட அல்லது வாங்கப்பட்ட படத்தின் சிறப்புக் காட்சி நடத்தப் படும்போது, கேளிக்கை வரிக்கு விலக்கு அளித்து ஆணை பிறப்பித்துள்ளோம்.

குழந்தைகளுக்கான திரைப்படத்தைக் கலைவாணர் அரங்கில் திரையிடும் பழக்கத்தையும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளோம்.

**சிறப்புக் காட்சிகள் :**

கலைவாணர் அரங்கத்தில் குழந்தைகள் திரைப்படம் காட்டுவதுடன் கூட, சென்னை மாநகரில் உள்ள இதர ஆறு திரையரங்க உரிமையாளர்களும் குழந்தைகளுக்குச் சிறப்புக் காட்சி நடத்த முன் வந்திருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பை நான் பாராட்டுகிறேன். அந்தத் திரை அரங்குகளின் உரிமையாளர்களைப் பின்பற்றி மேலும் பல உரிமையாளர்கள் குழந்தைகள் திரைப் படத்தைத் திரையிட முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

இந்த விழாவில் பெரும்பாலும் தமிழ், ஆங்கிலத் திரைப்படங்களே காட்டப்படும் என்று கேள்விப் பட்டேன். இனி வரும் ஆண்டுகளில் இந்தியாவின் இதர மண்டலங்களில் இருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் பரிசு பெற்ற திரைப்படங்களை வரவழைத்துத் திரையிட விரும்புகிறோம். இதனால், சக்திவாய்ந்த சாதனமாக விளங்கும் சினிமா மூலமாக, சிறந்த கலாச்சாரத் தொடர்பு ஏற்படும் வாய்ப்பு நமது குழந்தைகளுக்கும் கிடைக்கும்.

**திரைப்படச் சங்கம் :**

நமது முதல் பிரதமரும், குழந்தைகளின் மேல் அளவற்ற பாசம் கொண்டவருமான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், குழந்தைகளுக்கான திரைப்படத்தை ஊக்குவிப்பதின் அவசியத்தை உணர்ந்தார். இதன் விளைவாக 1955-ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான திரைப்



படச் சங்கம் நிறுவப்பட்டது.

ஆயினும், பல்வேறு காரணங்களால் குழந்தைகளுக்கான திரைப்பட இயக்க வளர்ச்சியில் மெதுவான முன்னேற்றமே ஏற்பட்டுள்ளதை உணர்கிறேன்.

குழந்தைகளுக்கான திரைப்படச் சங்கம் சில நல்ல திரைப்படங்களைத் தயாரித்து உள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், அவ்வாறு தயாரிக்கப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இவ்வகையில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டது இந்திய நாடு. நமது நாட்டின் கல்வித் தரம் மிகவும் குறைவு. உலகிலேயே மிக மிகக் குறைந்ததும் ஆகும். ஆயினும், புத்தகங்களை வெளியிடுவதில் முன்னணியில் உள்ள உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

உலகில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் ஒன்றான இந்தியாவில்தான் நாம், இன்றும் உள்ளோம். நம்முடைய வாழ்க்கைத் தரமும் மிகவும் குறைவு. ஆனால், உலகில் உள்ள திரைப்படம் தயாரிக்கும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்தியாவில் உள்ள எந்தக் குடும்பமும் அல்லது எந்தத் தம்பதியும் குழந்தை இல்லாமல் இருக்க விரும்புவதில்லை.

புத்தக வெளியீட்டிலும், குழந்தைகள் புத்தகம் உற்பத்தியிலும் மாபெரும் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குழந்தைகளுக்கான திரைப்படம் தயாரிப்பதில் வருந்தத்தக்க வகையில் அடிமட்டத்தில் உள்ளோம். இந்த நிலையை மாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது. குழந்தைகளுக்கான திரைப்படத்தை ஏராளமான எண்ணிக்கையில் உற்பத்தி செய்யத் துவங்குவது சிறந்ததாகும். மக்களிடையே தகவல், கல்வி ஆகியவற்றைப் பரப்பும் சக்திவாய்ந்த சாதனமாகவும், மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் சாதனமாகவும் சினிமா உள்ளது என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

சமுதாயத்தின் கலாச்சாரம், வாழ்க்கை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பிரசித்திபெற்ற கலையாகவும் சினிமா ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆகவே, நவீன சமுதாயத்தில் குழந்தைகள் திரைப்படம் முக்கிய அங்கம் வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

**வண்டலூர் பூங்கா**

சென்னை வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயிரியல் பூங்காவின் முகப்புத் தோற்றம் மாற்றியமைக்கப்படுவதுடன் வேறு பல வசதிகளும் செய்யப்படும்.

**குழந்தைகள் திரைப்படம்**

குழந்தைகள் திரைப்படம் குழந்தைகளுக்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல் வயது வந்தவர்களுக்கும் முக்கியமானதாகும். ஏனெனில் குழந்தைகள் படம் மூலமாகவே, குழந்தைகளைப் பற்றி வயது வந்தவர்கள் நன்கு தெரிந்து கொள்கிறார்கள். அத்துடன் குழந்தைகளுடன் மிகவும் நெருங்கிப் பழகி, அவர்களுடைய தேவை, விருப்பம், மனப்பாங்கு, உணர்ச்சிவயப்படுதல் ஆகியவற்றை நன்கு தெரிந்து கொள்ளவும் குழந்தைகள் திரைப்படம் உதவுகிறது.

இந்தியச் சமுதாயம் விரைவாக மாறி வருகிறது. பழமைக் கருத்துக்கள் உடைந்து நொறுங்குகின்றன. புதிய எண்ணங்கள் இன்னும் எழவில்லை. கூட்டுக் குடும்பங்கள் பிரிவது, நமது நாட்டில் ஏற்பட்டு வரும் மாபெரும் சமுதாய மாற்றமாகும்.

இந்தச் சூழ்நிலையில், குழந்தைகளை நன்கு பராமரித்து அவர்கள் நலமாகவும், அறிவுமிகுந்தவர்களாகவும், நாட்டின் நல்ல குடிமகனாகவும் ஆக்குவது மிகவும் முக்கியமானதாகும். தகவல் தொடர்புச் சாதனம் ஒவ்வொன்றையும், குழந்தைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும். இவ்வகையில் சினிமா இத்தேவையைச் சிறப்பாக நிறைவேற்றுகிறது. இந்த ஆதாரத்தை நாம் போதிய அளவில் உபயோகித்துக் குழந்தைகளுக்குச் சரியான கல்வியையும், முழுமையான சரியான கேளிக்கையையும் அளிக்காதது துரதிர்ஷ்டமேயாகும்.

நாம் அனைவரும் குழந்தையாக இருந்துள்ளோம். நம்மில் பலர், நமது குழந்தைப் பருவ நினைவுகளைப் பெரிதும் விரும்புகிறோம்.

தற்போது நாம் உள்ளதை விட, குழந்தைப் பருவத்தில் குழந்தைகளைப் போல் நாம் வெகுவேகமாகக் கற்றோம்.

மேதை பெர்ட்ராண்ட் ரஸல் - குழந்தைகளின் பேரார்வம் அவை வளர வளரக் குறைந்து விடுகிறது என்று சுட்டிக் காட்டியுள்ளார். இது அறிவியல் உண்மையாகும். ஆகவே, எல்லா வகையான கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் குழந்தை இருக்கும்போதே, அக்குழந்தை சிறந்த முறையில் கற்க நாம் ஆவன செய்ய வேண்டும். இதைக் குழந்தைகள் திரைப்பட இயக்கம் செய்ய முடியும்.

தமிழ்நாடு அரசின் செய்தி-சுற்றுலாத்துறை ஏற்பாடு செய்துள்ள குழந்தைகளுக்கான திரைப்பட விழா வைத் துவக்கிவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த இயக்கத்திற்கு எங்களால் இயன்ற எல்லா வகையான ஊக்குவிப்பையும் அளிக்க நாங்கள் விரும்புகிறோம். இதன் ஆரம்பமாகக் குழந்தைகளுக்கான திரைப்பட விழாவைத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நடத்தும் என்று அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் அனைவரும் இந்த விழாவில் பங்கு கொண்டு, இந்த விழாவை மகிழ்ச்சியானதாகவும், நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாகவும் ஆக்குவீர்கள் என்று நம்புகிறேன்.''

-இவ்வாறு மாண்புமிகு முதலவர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேருரை ஆற்றினார்கள்.

**நன்றியுரை:**

விழா முடிவில் - தென் பிராந்தியக் குழந்தைகள் திரைப்படத்துறை மேலாளர் திரு. சுபாஷ் பிலே நன்றி உரையாற்றினார்.

குழந்தைகள் சார்பில், செல்வி பிருந்தா நன்றி கூறினார்.

விழா முடிவில் குழந்தைகளுக்கான திரைப்படம் ஒன்றும் கலைவாணர் அரங்கில் திரையிடப் பட்டது.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல். ராஜேந்திரன்.**




# இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர்

'பெரியார்' ஒரு தனி மனிதரின் பெயரல்ல. ஒரு நாட்டின் நூற்றாண்டு வரலாறு. மனித சமுதாயத்தின் ஒரு மகத்தான தத்துவம்.

உலகில் தோன்றி மறையும் கோடானு கோடி மனிதர்களில் மிகச் சிலரே இப்படி வரலாறாக, வாழ்க்கையின் தத்துவமாக வாழ்ந்து மறைகின்றனர்.

இத்தகைய ஒரு சிறப்பு. பெறற்கரிய பேறு, தமிழ் மண்ணிற்குக் கிடைத்தது. இந்த மண்ணிலேதான் பெரியார் பிறந்தார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று முழங்கினார் பாரதியார். அந்தத் தமிழகம்தான், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரை, விடுதலை வீரரை, பகுத்தறிவுப் பகலவனை, புத்துலகச் சிற்பியை - தந்தை பெரியாரை - உலகிற்கு வழங்கியது.

மென்மையாக உடலைத் தீண்டி, மெய்சிலிர்க்க வைக்கும் தென்றல் காற்றல்ல பெரியார்; சுழன்றடிக்கும் சூறாவளி.

சலசலவென்று ஒலி எழுப்பி, கண்களுக்கு விருந்தாய், கானிலே வளைந்தோடும் சிற்றாறல்ல பெரியார்; பொங்கிப் பாயும் கங்கை நதி.

காண்போர் மனம் கவரும் வெள்ளிப் பனி மலையல்ல பெரியார்; வெடித்துச் சிதறும் எரி மலை.

ஆம்! அவர் சித்தார்த்தனாகத்தான் பிறந்தார். ஆனால், புத்தராக மாறவில்லை!

போர்க்கோலம் பூண்டார்;

சமூக அநீதிகளை, அக்கிரமங்களை அழிக்கப் புறப்பட்டார்.

கொடுமைகளைக் கண்டு அஞ்சுவது கோழைத் தனம், ஒதுங்குவது ஈனத்தனம் என்று வீரமுழக்க மிட்டார்.

ஒரு நூற்றாண்டுக்கால வீர வரலாறு படைத்தார்.

**- டாக்டர் எம்.ஜி.ஆர்.**



# பேரறிஞர் அண்ணா வாழ்க்கைக் குறிப்பு

*1909*-செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், காஞ்சிபுரத்தில், எளிய நெசவாளர் குடும்பத்தில், நடராசன், பங்காரு அம்மாள் தம்பதியருக்கு *15-9-1909* அன்று பிறந்தார். இவரது வளர்ப்புத் தாய் சிற்றன்னை இராசாமணி அம்மையார்.

*1914*-காஞ்சிபுரம் பச்சையப்பன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்புவரை பயின்றார்.

*1927*-காஞ்சிபுரம் நகராட்சியில் சில திங்கள் பணிபுரிந்தார்.

*1928*-சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார்.

*1929*-பிப்ரவரி *17,18* தேதிகளில் செங்கல்பட்டு நகரில் நடந்த முதல் மாநில சுயமரியாதை மாநாட்டில் பார்வையாளராகக் கலந்துகொண்டார்.

*1930*-பச்சையப்பன் கல்லூரி முதல்வர் உதவியால், சம்பளச் சலுகை பெற்று, பி.ஏ. (ஆனர்ஸ்) வகுப்பில் சேர்ந்து படித்தார்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே, பெற்றோர் விருப்பப்படி, *1930*-இல் காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கும், இராணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது.

*1932*-நீதிக்கட்சி அமைச்சரவையில் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த பொப்பிலி அரசர் தொடர்பு பேரறிஞர் அண்ணாவுக்கு ஏற்பட்டது.

*1935*-திருப்பூரில் நடந்த செங்குந்த வாலிபர் மாநாட்டில் முதன்முதலாக தந்தை பெரியாரைச் சந்தித்து உரையாடினார். அன்று முதல் தந்தை பெரியாரைத் தமது ஒரே தலைவராக ஏற்றார்

பி.ஏ.(ஆனர்ஸ்) பட்டம் பெற்றதும், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருள் வசதி இன்மையால் மூன்று திங்களுக்கு மேல் சட்டப் படிப்பைத் தொடர முடியவில்லை.

சென்னையில் உள்ள தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகச் சில திங்கள் பணியாற்றினார்.

நீதிக்கட்சித் தலைவர் பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து தொடங்கிய 'பால பாரதி' என்ற வார ஏட்டிற்கு ஆசிரியராக இருந்து தொழிலாளர் நலம் பேணும் கட்டுரைகளை வரைந்தார்.

*1936*-சென்னை மாநகராட்சித் தேர்தலில் பெத்து நாயக்கன்பேட்டையில் நீதிக்கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

*1938*-'விடுதலை', 'குடியரசு' ஏடுகளின் துணை

ஆசிரியர் ஆனார். 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏட்டிற்கும் துணை ஆசிரியராக இருந்தார்.

செப்டம்பர் 26-இல் தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்று நான்கு மாதம் சிறைவாசம் ஏற்றார்.

*1939*-நீதிக்கட்சியின்பொதுச்செயலாளர் ஆனார்.

*1940*-பம்பாயில், தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர் சந்திப்பின்போது, மொழிபெயர்ப் பாளராகக் கலந்து கொண்டார்.

*1942*-மார்ச் 7 - 'திராவிட நாடு' வார ஏட்டின் ஆசிரியர் ஆனார்.

*1944*-ஆகஸ்டு 19 - சேலம் நீதிக்கட்சி மாநாட் டில், பேரறிஞர் அண்ணா தீர்மானம் மூலம், நீதிக்கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது.

*1946*-ஜூலை 29 - நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாவேந்தர் பாரதி தாசனுக்கு, பேரறிஞர் அண்ணா பொற்கிழி அளித்தார்.

*1947*-ஆகஸ்டு 15 நாடு விடுதலை பெற்ற திரு நாளைப் பெரியார் துக்க நாள் எனல் பொருந் தாது என்று திராவிடநாடு ஏட்டில் பேரறிஞர் அண்ணா எழுதினார்.

*1948*-ஜூலை 17 - இந்தி எதிர்ப்புப் போராட்டத் தில் சிறைவாசம் ஏற்றார்.

*1949*-ஜூலை 9 - தந்தை பெரியார் - மணியம்மை திருமணம் நடந்தது.

பேரறிஞர் அண்ணாவும் மற்றும் பலரும் திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறி *17.9.1949*-இல் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர்.

தி.மு.க.-வின் முதல் பொதுச் செயலாளர் ஆக பேரறிஞர் அண்ணா ஆனார்.

*1950*-செப்டம்பர் 18 - ஆரியமாயை என்னும் நூல் எழுதியதற்காக ஆறு மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றார்.

*1952*-ஆகஸ்டு - இந்தி எதிர்ப்பு அறப்போர் - இந்தி எழுத்துகளை அழித்தார்.

*1953*-ஜூன் 15 - தி.மு.க.-வின் அதிகார பூர்வ நாளேடான "நம்நாடு" ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

ஜூலை 15 - மும்முனைப் போராட்டத்தில் முன்னதாகக் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றார்.

*1956*-மே 17-20 - திருச்சியில் நடந்த தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில் பொதுத் தேர்தலில் பங்கேற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தி, தி.மு.க. பொதுத் தேர்தலில் போட்டியிடு



## பெரியார் நம்மைப் பிரியார்!

### கவிஞர் சிங்காரவேலன்

விடியாத தமிழர்க்கு விடியல் தந்தே
விரிகதிராய் ஈரோட்டில் எழுந்த சிங்கம்!
படியாமை அறியாமை நோயில் வீழ்ந்தோர்
பகுத்தறிவாம் ஒளிபெறவே செய்த தங்கம்!
தடியூன்றி வாழ்ந்திட்ட நாளில் கூட
தமிழ்வளர்த்து இனம்காத்த உழைப்பின் குன்றம்!
இடிபோன்ற முழக்கத்தால் எழுச்சிப் பேச்சால்
இருட்சூழ்ச்சி தனைவென்ற இரும்பு நெஞ்சம்!

வதற்குப் பொதுமக்கள். அனுமதியைப் பெற்றார்.

*1957*-மார்ச் - காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜூன் - 'ஹோம்லேண்ட்' ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

*1958*-ஜனவரி 3 - சென்னை வந்த பிரதமர் பண்டித நேருவுக்கு ஜனவரி 6-ஆம் தேதி கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டதால் கைது செய்யப் பட்டுச் சிறைவாசம் ஏற்றார். 5 நாள் கழித்து விடுதலை ஆனார். ஏப்ரல் 23, தடையை மீறிய குற்றத்திற்காக மீண்டும் சிறைவாசம் ஏற்றார்.

*1959*-சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களை வென்றது.

*1962*-பிப்ரவரி - காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தலில் தோல்வியடைந்தார். பின்னர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ஆனார்.

ஜூலை-19 - விலைவாசி உயர்வு எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் கைதாகி வேலூர் சிறை யில் பத்து வாரம் கடுங்காவல் தண்டனை பெற்றார். இந்தியா மீது சீனா போர் தொடுத்தது. அவர் விடுதலை பெற்ற உடன் நாட்டின் யுத்த முயற்சிகளுக்குப் பல உதவிகள் செய்தார்.

*1963*-ஜனவரி - கட்சியின் கோரிக்கை பிரிவினை அல்ல என்பதற்கேற்ற மாற்றம் செய்து கட்சியைக் காப்பாற்றினார். புதிதாக, "காஞ்சி" என்னும் வார ஏட்டினைத் தொடங்கினார்.

நவம்பர்-17 - கட்டாய இந்தி 17-வது மொழிப் பிரிவுச் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில்

நவம்பர் 16 அன்றே கைதாகி ஆறு மாதம் கடுங் காவல் தண்டனை பெற்றார்.

1965-ஜனவரி 26 - முதல், இந்தியை இந்திய யூனியன் ஆட்சி மொழியாக்க நாடாளுமன்ற ஆட்சி மன்றக்குழு சிபாரிசு செய்ததை எதிர்த்து, 'ஜனவரி 26 துக்க நாள்' என, தி.மு.க. அறிவித்தது தொடர்பாக அண்ணா சிறைவாசம் ஏற்றார்.

ஜூலை - சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஹாங்காங், கம்போடியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

1967-பிப்ரவரி - பொதுத்தேர்தலில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுத்தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களில் வெற்றி.

மார்ச் - நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 6.3.1967 அன்று தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஏப்ரல்-26 - தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்றார்.

மே-15 - ரூபாய்க்குப் படியரிசித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

ஜூலை-18 - சென்னை மாநிலத்தைத் 'தமிழ்நாடு' என்று அழைக்க அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் செய்திடும் பெயர் மாற்றத் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றச் செய்தார்.

ஜூலை-23 - சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற மைய அரசை வற்புறுத்தி, தமிழ்நாடெங்கும் 'சேலம் எழுச்சி நாள்' கொண்டாடினார்.

ஆகஸ்ட்-16 - 'சீரணி' கண்டார்.

செப்டம்பர்-19 - சென்னையில் கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

1968 - ஜனவரி 1 - உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் வழங்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் உருவச்சிலை சென்னை-அண்ணா சாலையின் மையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனவரி 2- தமிழ் வளர்த்த சான்றோருக்கும், கற்புக்கரசி கண்ணகிக்கும் சென்னைக் கடற்கரைச் சாலையில் சிலைகள் அமைத்துப் போற்றினார். ஜனவரி 3 - உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தைச் சென்னை மாநகரில் நடத்தினார். திருக்குறள் ஆராய்ச்சிக்கு ரூ.9 இலட்சம் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார்.

ஜனவரி-23 - தாய்மொழி தமிழ், உலக மொழி ஆங்கிலம் ஆகிய இரு மொழித் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றச் செய்தார்.



## பெரியார் ஒருவர்தான்!

'பெரியாருக்கும் எனக்கும் உள்ள நட்பு இன்று நேற்று ஏற்பட்ட தல்ல. அது 35 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. 'வைக்கம் வீரர்' என்பதை இந்த அடியேன் கைப்பேனாதான் சூட்டியது.

திருவிதாங்கூரிலே தீண்டாமையை ஒழிக்க மாபெரும் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற பெரியாருக்கே அந்தப் பெருமை; ஆனால், அந்தப் புகழ் யாருக்கோ போயிற்று!

பெரியாரது அந்த வீரத்தியாகம் எனது வாழ்க்கைக் குறிப்பிலுள்ளது. எனக்குப் பெண்டு பிள்ளைகள் இல்லை. நான் செத்துப் போனால் எனக்காக அழுகின்ற ஒரு நண்பர் இருந்தால் அவர் பெரியார் இராமசாமியாகத்தானிருக்க முடியும்.

இந்த நாட்டில் பெரிய காரியம் செய்தவர்; பெரியார் ஒருவர்தான்!

- தமிழ்த் தென்றல் திரு.வி.க.

ஏப்ரல், மே - அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் சென்று வந்தார். அமெரிக்காவில் யேல் பல்கலைக் கழகத்தில் சப்பெல்லோஷிப் விருது பெற்றார். வாடிகன் நகரில் போப்பாண்டவரைச் சந்தித்தார்.

செப்டம்பர்-8 - அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

செப்டம்பர்-16 - அமெரிக்காவில் உலகப்புகழ் பெற்ற புற்றுநோய் மருத்துவமனையான மெமோரியல் மருத்துவமனையில் டாக்டர் மில்லரால் அண்ணாவுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

நவம்பர்-6 - சிகிச்சை முடிந்து அண்ணா சென்னை திரும்பினார். டிசம்பர் 1 - உடல் நலம் கெட்டிருந்தும் டாக்டர்கள் ஆலோசனையை மீறி, தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில் கலந்து கொண்டு பேசினார்.

1969-ஜனவரி 14 அன்று பொங்கல் தினத்தில் சென்னை தியாகராய நகரில் கலைவாணர் சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசினார். அதுதான் அண்ணாவின் கடைசிப்பொதுநிகழ்ச்சி.

ஜனவரி-25 - அமெரிக்க டாக்டர் மில்லர் சென்னை வந்து அண்ணாவுக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்தார்.

பிப்ரவரி-3 - (பிப்ரவரி 2 நள்ளிரவு 12.20 மணி) சென்னையில் மறைவு. அண்ணாவின்

உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

பிப்ரவரி-4 - அண்ணாவின் உடல் அரசு மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டு, சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு எதிரில் மெரினா கடற்கரையில் காலை 11.30 மணிக்குச் சந்தன மரப்பெட்டியில் வைக்கப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது.

**நினைவில் அண்ணா**

தமிழக அரசு அண்ணா துயிலும் அந்த இடத் தில் கல்லறை எழுப்பி, ''எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'' என்று அதில் எழுதி வைத்து, அணையா விளக்கை ஏற்றிவைத்து, அண்ணா சதுக்கத்தை உருவாக்கி இருக்கிறது. அங்கு அண்ணாவின் அழகு தமிழைக் கேட்க ஒலிச்சாதன வசதி அமைக்கப்பட்டுள்ளது. அண்ணா நூலகமும், அண்ணா நூல்கள் விற் பனைக் கூடமும் அண்ணா சதுக்கத்தை அணி செய்கின்றன.

1969 தமிழகச் சட்டப் பேரவையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

1970-பிப்ரவரி 3 - மைய அரசு அண்ணா நினைவாக 20 காசு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

1971-சென்னை நகரில் மவுண்ட் ரோடுக்கு, அண்ணா சாலை என்ற பெயர் சூட்டப்பட்டது.

தமிழக அரசு வாங்கிய இரண்டு கப்பல்களுக்கு 'எம்.பி. தமிழ் அண்ணா' என்ற பெயரும், 'தமிழ் அண்ணா' என்ற பெயரும் சூட்டப்பட்டன.

1978-சென்னை, கிண்டியில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு 'அண்ணா பல்கலைக் கழகம்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

1980-செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த இல்லத்தைத் தமிழக அரசு 16.9.1980 அன்று 'அண்ணா நினைவு இல்லமாக' மாற்றியது.

1985-செப்டம்பர் 15 - அன்று, மதுரை மாவட்டத்தைப் பிரித்து, திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நினைவாக, சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட, அண்ணா போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டது.

## தமிழர் தேடிய செல்வம்!
—பி.வி. கிரி



**சமுதாயம் விழிப்புறவே**
**சத்தான படைப்புகளை**
**அமுதான தமிழ்மொழியில்**
**அடுக்கடுக்காய் வழங்கியவர்!**

**அறியாமை நீங்கிடவே**
**அறிவுச்சுடர் ஏந்திநாளும்**
**இருளாலே சூழநின்ற**
**இளைஞர்களை எழுப்பியவர்!**

**எடுப்பான எழுத்துகளால்**
**எண்ணங்களைக் கோத்திட்டே**
**துடிப்பான ஏடுகளில்**
**தொடர்ந்துநிதம் எழுதியவர்!**

**மேடையெலாம் முழக்கஞ்செய்து**
**மேதினியோர் போற்றிடவே**
**தேடியதோர் செல்வம்போல்**
**தோன்றியவர் நம்அண்ணா!**



# ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி

தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 538 பேர்களைத் தேர்ந்தெடுத்து 21.8.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கடலூரிலிருந்து அரசுச் செலவில் பேருந்து களில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர் களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக 4 பேர்களுக்குத் தையல் இயந்திரங்களும், சலவைப்பெட்டி 4 பேர்களுக் கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 50 பெண்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து 50 ஆயிரமும், கலப்புத் திருமண உதவி 7 பேர் களுக்கும், விதவையின் மகள் திருமண உதவி 5 பேர் களுக்கும், விதவை மறுமண நிதி உதவித் திட்டத் தின்கீழ் 3 பேர்களுக்கும், 12 நரிக்குறவர்களுக்குப் பாசிமணி செய்வதற்கு கடன் உதவி ரூ.72 ஆயிரமும் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களுக்கு 123 நபர்களுக்கு ரூ.20 இலட்சத்து 39 ஆயிரத்து 850 வழங்கப் பட்டது. 49 மீனவர்களுக்கு ரூ.10 இலட்சத்து 78 ஆயிரம் மதிப்பீட்டில் விசைப்படகிற்கான இயந் திரமும் (Out Board Motor) வழங்கப்பட்டது. ஏழை மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையாக 10 நபர்களுக்கு ரூ.10 ஆயிரமும், 124 பேர் களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், 33 நபர் களுக்கு நிலப்பட்டாக்களும் வழங்கப்பட்டன.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிரானைட்ஸ் தொழில் தொடங்க ஒருவருக்கு ரூ.48 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்பட்டது. ஆக மொத்தம் 538 பேர்களுக்கு 1,36,81,591 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்றுத் தொன்னூற்று ஒன்று மட்டும்) பெறு மானமுள்ள நலத்திட்ட உதவிகளை அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 359 பேர் பெண்களாவர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருத்தாசலம் பகுதியைச் சேர்ந்த திருமதி தேவகி என்பவரின் குழந்தைக்கு 'சக்கரவர்த்தி' என்று பெயர் சூட்டினார்.

# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! "முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்".

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.

**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY

MADRAS FERTILIZERS

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

HTA 8249



# தருமபுரி மாவட்டத்தில் பழங்காலக் கிராமிய நடனங்கள்

பழங்காலத்தில் தமிழக மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகையாக நிலத்தைப் பாகுபாடு செய்திருந்தனர். இவற்றில் முல்லை நிலமென்பது காடும் காட்டைச் சேர்ந்த நிலமுமாகும். இக்காட்டில் வாழ்ந்த மக்களுக்கு முக்கியத் தொழில் ஆநிரைகள் மேய்த்தலும், அதன் மூலமாக வரும் பொருளைப் பெற்று வாழ்தலுமாகும்.

அம் முல்லை நில மக்களுக்குத் தெய்வம் 'திருமால்' ஆகும். இன்னும் திருமாலுக்குச் செய்யும் வழிபாட்டைச் 'சேவை' என்ற சொல்லால் குறிப்பதை வைணவத் தலங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக, 'அரையர் சேவை' 'திடுத்துழாய் சேவை' என்றும் இறைவன் தரிசனத்தைச் 'சேவை சாதிப்பது' என்றும் குறிப்பர்.

தருமபுரி மாவட்டத்தின் வடகோடியில் மலை சூழ்ந்த காடுகளும் அக்காட்டினை அடுத்த ஊர்களும் இருக்கின்றன. இன்று பெரும்பாலும் தெலுங்கு மக்கள் இங்கு வாழ்ந்தாலும், அடுத்துள்ள ஆந்திர மாநிலத்தின் தாக்கமும் அப்பகுதிகளில் இருந்து குடியேறியவர்களின் கலப்பும் இதற்குக் காரணங்களாகும். இவற்றுக்கிடையில் முழுக்க முழுக்கத் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற மிகச் சிறிய கிராமமே 'காட்டூர்' ஆகும்.

பழங்காலத்தில் காடுகெடுத்து நாடக்கி, குடியிருப்புகளை உருவாக்கிக்கொண்ட அவர்கள் தங்கள் வாழ்விடத்துக்குக் 'காட்டூர்' என்றே பெயர் வைத்துக்கொண்டனர். இக்காட்டுப் பகுதியில் உள்ள சிறிய மலைக்கு 'எத்துலா மலை' எனப்பெயர். ஆகையால், இவ்வூரை 'எதுலா மலைக்காட்டூர்' என்றே பெயர் வைத்து அழைக்கின்றனர். இச்சொல் 'எதிலாமலை' என்ற சொற்றொடரிலிருந்து வந்திருக்க வேண்டும். 'இணையிலாதமலை' என்று இதற்குப் பொருளாகும். மரங்களடர்ந்த காடாக இப்பகுதியும், மலையும் இருந்தது என்பதற்கு அடையாளமாக இன்றும் இம்மலையும் மலையைச் சுற்றி உள்ள சிறிய காட்டுப் பகுதியும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இதுகாறும் பார்த்தவற்றிலிருந்து, இப்பகுதி முல்லை நிலத்தைச் சார்ந்தது என்றும், இப்பகுதிக்குத் 'திருமால்' வழிபடு கடவுளாக இருக்கிறார் எனவும் உணரலாம். ஆகவே, இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டை வைணவ முறைப்படி 'சேவையாட்டம்' எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் வேறிடங்களிலிருந்து இங்கு குடியேறியவர்கள் அல்லர். இவர்கள் இப்பகுதியின் பழங்குடியினரேயாவர். சேவையாட்டம் ஒரு குழு உணர்ச்சியுடன் ஆடுவதாகும். இவ்வாட்டத்தில் வீரமும், பக்தியும் கலந்திருக்கக் காணலாம் இவ்வாட்டத்தில் கையில் பிடித்திருக்கும் கோல்(பிரம்பு) ஆநிரை மேய்த்தலின் அடையாளம். சிவந்த ஆடைகள் வீரத்தின் அடையாளம். சிலவகை ஆபரணங்கள் அணிந்திருப்பர். தலைக்கவசம், மார்புக்கவசம் முதலியன இன்று எளிமையாக உருமாறியிருந்தாலும் அவை வீரர்கள் அணியும் உடற்கவசங்களின் வேற்று வடிவங்களேயாகும்.

காட்டில் இயற்கையாகப் பொறுக்கியெடுத்த மயிலிறகுகள் இவர்கள் உடலைச் சுற்றிக் கட்டிக்கொள்ளும் அலங்காரப்பொருள். கண்ணனை வழிபடுவதற்கு அடையாளமாக மயிலிறகுக் கொண்டை இவர்கள் தலையை அலங்கரிக்கும். காட்டில் இயற்கையாகக் கிடைத்த மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழலும் உறுமி எனப்படும் மேற்கருவியும் இதற்கு இசைக்கருவிகளாக இசைக்கப்படுகின்றன. வேறு எங்கும் காணப்படாத 'தலை உறுமி' எனும் தலையில் அணிந்து இசைக்கப்படும் ஒரு வாத்தியம் இங்கு சிறப்பிடம் பெறுகிறது. இக்கருவியை உடலில் வேறெங்கும் அணியாது தலையில் அணிவதற்கு இவர்கள் கூறும் காரணம் மெய்சிலிர்க்க வைக்கிறது. பௌர்ணமி நாளில் புலியால் கொல்லப்பட்ட பசுந்தோலைக் கொண்டு செய்யப்பட்டதால், பக்தியுடன் சிறப்பிடம்

—சி.கு. சரவணன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.



கொடுக்கப்பட்டு, தலையில் அணிந்து இசைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். கண்ணன் அணிந்த திலகம் இவர்கள் நெற்றியை அலங்கரிக்கும்.

பனிரெண்டு அடைவுகளுடன் இவ்வாட்டம் ஆடப்படுகின்றது. இக்கருவிகளே தம் இசையின் மூலம் மாறி மாறி இசைக்கப்படும் போது ஆடிக்கொண்டே ஆடைகளை மாற்றிக் கொள்கின்றனர். இரண்டு புல்லாங்குழல்கள், இரண்டு தலை உறுமிகள் இவ்வாட்டத்தின் இசைக்குழுவாகும். தொடக்கத்தில் திருமாலுக்குச் செய்யும் வழிபாட்டு நாட்களிலும் வீரச் செயல் புரிந்த நாட்களிலும் ஆடப்பட்டு வந்த இவ்வாட்டம் இன்று திருமாலுக்குச் செய்யும் திருவிழா நாட்களில் ஆடப்படுகின்றது. இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே விரதமிருந்துதான் கோயில்களில் வைக்கப்பட்டிருக்கும் இப்பொருள்களை முறைப்படிப் பூசை செய்து எடுப்பர்.

இச் சேவையாட்டம் தற்போதும் இம்மாவட்டத்தில் இப்பகுதி மக்களால் ஆடப்பட்டு, கிராமியக்கலை எவ்விதத்திலும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## பேரிக்காய் சாப்பிடுங்கள்

பேரிக்காய் சாப்பிடுங்கள் பலவீனத்தாலோ அல்லது வேறு காரணங் களினாலோ இதயம் படபடப்புக்கு உள்ளாகிறதா? கை, கால்களில் நடுக்கமும் வியர்வை கொட்டுதலும் உண்டாகிறதா? அப்படியானால் தொடர்ந்து பேரிக்காய் சாப்பிட்டு வந்தால் மேற்கூறிய தொல்லைகள் நீங்கப்பெறலாம்.

வளர்கின்ற பருவத்தில் உள்ள பிள்ளைகளது எலும்புகள் உறுதியாகவும், சீராகவும் வளர பேரிக்காய் உதவும். ஆப்பிளைப்போல் கடித்து உண்பதால் பற்கள் பலம்பெறுகின்றன.

கருவுற்ற பெண்டிரும், தாய்ப்பால் தரும் மகளிரும் இப்பழத்தை உண் பதால் தேவையான போஷாக்கைப் பெறுவதுடன் பால் சுரப்பும் அதிகமாகும்.

வைட்டமின் ஏ, பி, மற்றும் சுண்ணாம்பு நிறைந்த இப்பழம் ஜீரண மண்டல உறுப்புகளுக்கும் வேண்டிய சத்துக்களை தந்து நல்ல பசியை உண்டாக்குகிறது. உணவும் எளிதில் சீரணமாகும்.

நன்றி: கூட்டுறவு

# அரிய கற்சிற்பம் கண்டுபிடிப்பு

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் உள்ள ஆனாங்கூர் என்னும் கிராமத்தில் இருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால், கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் அல்லது இந்திரன் என்று கருதப்படும் அரிய கற்சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலம் தொட்டு ஆனாங்கூர் என்னும் இவ்வூர் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தமை கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது. இதனைப் புலப்படுத்தும் கல்வெட்டு இவ்வூர் அருகில் உள்ள கால்வாய்க் கரையில் கண்டறியப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வூரின் வடமேற்குப் பகுதியில் அகஸ்தீஸ்வரர் கோயில் ஒன்றும் அமைந்துள்ளது. தற்போதைய கட்டட அமைப்பைக் கொண்டு ஆய்வு செய்கையில் இக்கோயில் முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில், இக்கோயில் கர்ப்பக் கிருகத்தின் உட்புறச் சுவரில் முதலாம் குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டு காணப் பெறுதலாகும். கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களில் இதுவே பழமையானதாகும்.

இக்கோயிலில் மேலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை உள்ள துண்டுக்கல்வெட்டுக்களும் சில இங்கு உள்ளன. இக்கிராமத்தில் கிடைத்துள்ள பல்லவர் காலக் கல்வெட்டில் இவ்வூர் தெய்வத்தின் பெயர், ''மகாதேவர்'' என்றும் ஊரின் பெயர் 'ஆனாங்கூர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இவ்வூரில் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலத்திலேயே ஒரு சிவன் கோயில் இருந்தது என்பதும், பின்னாளில் அதன் இடிபாட்டின் மீது குலோத்துங்கச் சோழன் காலத்தில் இக்கோயில் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்கலாம் என்பதும் அறிய முடிகிறது.

மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் இக்கோயிலுக்கு விளக்கு எரிக்க 24 கழஞ்சுப்பொன் தானமாகத் தனிப்பட்ட ஒருவரால் வழங்கப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது.

முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டைக் கொண்டு ஆய்வு செய்கையில் இக்கோயில் தெய்வத்தின் பெயர் ''ஆனாங்கூர் உடையார்'' என்று உணர முடிகிறது. வேறு ஒரு கல்வெட்டு மூலம், இக்கிராமம் பனையூர் நாட்டிற்குட்பட்ட



## பொன்மொழிகள்

குடிப்பழக்கம் மனிதனைப் படுபாதாளத்தில் ஆழ்த்திக் குடும்பங்களையும், குழந்தைகளையும் நாசமாக்குகிறது.

•

நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகள் பள்ளிகளும், கல்லூரிகளும்தான். அங்குதான் எதிர்கால உலகமே உருவாக்கப்படுகிறது.

•

தீயை அணைக்க நீர் கேட்டால், சாம்பலாகப் போனபின் கொண்டு வரும் நீர் போன்றது, தக்க சமயத்தில் செய்யாத உதவி.

பகுதியாக விளங்கியது என்பதும் தெரியவருகிறது.

இக் கற்சிற்பத்தின் வடிவமைப்பைக் கொண்டு பார்க்கையில் கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் அல்லது இந்திரனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இறைவன் யானை மீது அமர்ந்து காட்சி தருவதாக உள்ளது. இத்தெய்வமும் அதன் வாகனமும் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இறைவன் தலையில் அணிந்துள்ள மகுடம் ஜடாமகுடமா? அல்லது கிரீடமகுடமா? என்பதை எளிதில் அறிய இயலாவண்ணம் உள்ளது.

வலது மேற்கையில் சக்தி ஆயுதமும், இடது மேற்கையில் அக்கமாலையும் உள்ளன. வலது கீழ்க்கை லோல ஹஸ்தமாகக் கீழே தொங்கிய நிலையிலும் இடது கீழ்க்கையைத் தொடை வைத்தும் காணப்படுகிறார். தடித்த உருவில் காணப்பெறும் கழுத்தணியும், கையணிகளும் இச்சிற்பத்தின் பழமையை உறுதி செய்கின்றன. யானையைப் பொருத்தமட்டில் அதன் முகப் பகுதியை மட்டும் காணமுடிகிறது. தந்தங்கள் குட்டையாகவும், காதுப்பகுதி மிகவும் அகலமாகவும் காணப்படுகின்றது.

யானை மீதமர்ந்து காணப்பெறும் முருகன் அல்லது இந்திரன் உருவம் பலகைக் கல்லில் பெரிதாக வடிக்கப்பட்டுக் காணப்படுவது இதுவே முதன் முறையாகும். மலையைக் குடைந்து செதுக்கப்பட்ட உருவம் ஒன்று மகாபலிபுரத்தின் அருகே உள்ள சாளுவன்குப்பம் பகுதியில் அமைந்து உள்ள புலிக்குகையில் முன்புறச் சுவரில் முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் கிழக்குப் பக்கத்தில் சுமார் 50 கஜ தூரத்தில் கஜலட்சுமி மற்றும் கன்னிமார் எழுவர் கொண்ட சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கன்னிமார் எழுவரில் (தாய்மார் எழுவர்) ஐவர் உருவம் மட்டுமே கிடைத்துள்ளன. அவை அமர்ந்த



நிலையில் வலது கையில் உரிய ஆயுதமேந்தியும், இடது கையை இடது தொடை மீது வைத்த நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றின் உருவ அமைதியைக் கொண்டு பார்க்கையில் இவைகளும் முருகன் அல்லது இந்திரன் சிற்பத்தின் காலத்தைச் சார்ந்தவை என்று கருதலாம்.

தாமரை மலர் மீது அமர்ந்த நிலையில் காணப்பெறும் கஜலட்சுமி, இருகைகளிலும் தாமரை மலர் ஏந்தியும், இருபக்கமும் யானைகள் தும்பிக்கையை உயர்த்திய நிலையிலும் காணப்படுகிறார். தாமரை மலர்ப் பீடத்திற்குக் கீழ் இரு பூதகணங்களும் உள்ளன.

இத்துறையைச் சார்ந்த திரு. கோ.முத்துசாமி, கல்வெட்டாய்வாளர், இவ்வூரிலும் இவ்வூரைச் சுற்றியுள்ள ஏரிப்பகுதியிலும் கல்வெட்டாய்வு மேற்கொண்டபோது மேற்குறிப்பிட்ட சிற்பங்களுடன் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த எட்டுக் கைகளுடன் கூடிய இரண்டு துர்க்கைச் சிற்பங்களையும் ஒரு விஷ்ணு சிற்பத்தையும் கண்டுபிடித்துள்ளார்.

# துளிகள்!

## போலியைக் கண்டு ஏமாறாதீர்!

அவசரமாக ரயிலில் பயணம் செய்பவர்கள், ஏமாற்று இடைத் தரகர்கள் கொடுக்கும் போலியான பெயரைக்கொண்ட டிக்கெட்டு களை வாங்கி ஏமாந்துபோவது தெரிந்ததே. அத்தகைய போலி டிக்கெட்டுகளை வாங்கி ஏமாறா தீர்கள் என்று தொலைக்காட்சி மூலமும், பத்திரிகை மூலமும் மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1991-இல் போலியான டிக் கெட் மூலம் பயணம் செய்த 9,153 பேரை ரயில்வே வாரிய சிறப்புக் கண்காணிப்புக் குழு பிடித்தது. இவ் வாண்டு மே மாதம் வரை இது போன்று 2,796 பேர் பிடிக்கப் பட்டனர்.

1991-இல் போலியான பெயர் களில் டிக்கெட்டுகளை வாங்கி விற்பனை செய்த 2,269 இடைத் தரகர்களை இக்குழு பிடித்தது. இவ் வாண்டு மே மாதம் வரை 983 போலி இடைத்தரகர்களை இவ் வாரியம் பிடித்துள்ளது.

## அஞ்சல் சேவை

கிராமங்கள், கிராமப் பஞ்சாயத்துகள் எல்லா வற்றிலும் அஞ்சல் நிலையங்களை அமைப்பதற்கு அரசு எண்ணியுள்ளது. அந்த அஞ்சல் நிலையங் களில் பொதுத் தொலைபேசி இணைப்பு வசதியும் இருக்கும். நாட்டில் தற்போது 1,20,266 கிளை அஞ்சல் நிலையங்கள் இயங்குகின்றன. நாடு விடுதலை அடைந்த சமயத்தில் 22,216 அஞ்சல் நிலையங்களே இயங்கின. அஞ்சல் நிலையங்களின் வளர்ச்சி, .புறப்பணியாளர்களின் துணையின்றிச் சாத்தியமாகியிருக்காது. தற்போது 2,94,372 புறப் பணியாளர்கள் அஞ்சல் சேவையில் ஈடு பட்டுள்ளனர்.

அஞ்சல் சேவையை மேம்படுத்துவதற்காக, இரவு நேர விமான அஞ்சல் சேவையை மீண்டும் தொடங்கவும், அஞ்சல் பொருட்களின் காகிதத் தரத்தை உயர்த்துவதற்கும், பணவிடைகளை 'ஃபாக்ஸ்' வாயிலாக அனுப்புவதற்கும் திட் டங்கள் உள்ளன.

## வாசனையோடு வளம்

வாசனைத் திரவிய எண்ணெய் மற்றும் பிசின் ஏற்றுமதி மூலம் 1991-92-இல் 56 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. இப் பொருட்களின் ஏற்றுமதியில் 60 சதவிகிதம் அமெரிக்கா வாங்கியது. இத்துறையில் ஆண்டுக்கு 30 சதவிகித வளர்ச்சி ஏற்படும் வாய்ப்பு இருக் கிறது. இவற்றின் ஏற்றுமதி முனைப்பிற்கு உதவும் முகமாக, இப்பொருட்களின் மீதான ஏற்றுமதி வரி ஒராண்டுக்காலத்துக்கு (1993 ஜூன் இறுதி வரை) விதிக்கப்படாது என அரசு சலுகை அளித் துள்ளது.

## மின்சாரம்

கடல் அலைகள், காற்றா லைகள், நீர், நிலக்கரி இவற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. இப்போது சூரிய ஒளியைக் கொண்டும் மின்சாரம் தயாரிக்கும் முறையை மத்திய மின்னணு நிறுவனம் அமலாக்கி வருகிறது. சூரிய மின்கலம் சூரிய ஒளியை நேரடியாக மின்சாரமாக மாற்றுகிறது. இந்தச் சூரிய மின்கலங் களை உற்பத்தி செய்வதில் உலகில் ஐந்தாவது இடத்தை மத்திய மின் னணு நிறுவனம் வகிக்கிறது.

ஊரக மற்றும் கிராமப்பகுதி களுக்கு ஏற்ப இந்நிறுவனம் சூரிய மின்கலங்களை வடிவமைத்துக் கொடுக்கிறது. இதுவரை இந்நிறு வனம் 26,000 மின்கலங்களை உற் பத்தி செய்து ஊரகப்பகுதிகளுக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம், ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகம், தொலைத்தொடர்பு, முதியோர் கல்வி மையங்கள், கிராம மருத்துவ மனைகள், ஆகியவற்றுக்குப் பயன் படுகிறது.

## ஐந்து நிமிடம் போதுமே!

உள்ளூர்த் தொலைபேசி அழைப்பு ஒன்றின் காலக்கெடு தற்போது ஐந்து நிமிடங்களாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முப்பதாயிரத் திற்கும் மேற்பட்ட இணைப்புகளைக் கொண்டி ருக்கும் மின்னணுத் தொலைபேசித் தொடர்பகங் களில் இம்முறை அமலாகியுள்ளது. தில்லி, பம்பாய், அகமதாபாத், சூரத், பரோடா, ராஜ் கோட், சென்னை, கல்கத்தா, பெங்களூரில் இம்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சுருங்கப் பேசி, சீராகச் செயல்பட உதவிடு வோம்!

சென்ற ஆண்டில் ஏழு இலட்சம் புதிய தொலைபேசி இணைப்புகள் கொடுக்கப்பட்டன. இருந்தபோதிலும், இவ்வசதிக்காகப் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 24 இலட்சம் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

—நன்றி: 'தூவானம்'

# தருமபுரி மாவட்டத்தில் அரசுத் திட்டப் பணிகள் விளக்க முகாம்

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சீரிய தலைமையின் கீழ் செயல்படும் தமிழக அரசு, மக்கள் போற்றும் மகத்தான திட்டங்களைத் தீட்டி, அந்தத் திட்டங்களின் பலன் மூலை முடுக்குகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் செயல்படுத்தி வருகின்றது.

அரசுத் திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்து, அதன் பயனை அடைகின்ற வகையில் அரசு பல்வறு வகையில் விளம்பரப்' பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த அடிப்படையில், 18.7.92 முதல் 26.7.92 வரை தருமபுரி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் அரசு நலத் திட்டப்பணிகள் விளக்க முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம் முகாமினையொட்டி மாவட்டத் தலைநகர் தருமபுரியில் மாவட்ட விளையாட்டரங்கில் அனைத்துத் துறைகள் பங்கேற்கும் அரசுத் திட்டப் பணிகள் விளக்கப் பொருட்காட்சி ஒன்று நடைபெற்றது. இந்தப் பொருட்காட்சியில் அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் 31 இடம் பெற்றிருந்தன. 4 கைத்தறிக் கூட்டுறவுச் சங்க அரங்கங்கள், 15 தனியார் அரங்குகள் ஆகியவை இடம் பெற்றன.

பொருட்காட்சியில் தினசரி கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், ஆறு வீடியோ திரையரங்கங்கள் அமைக்கப்பட்டு, அதில்-பல்வேறு துறைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட வீடியோ கேசட் மூலம், வீடியோ படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு, அரசுத் திட்டங்களை மக்கள் அறியும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தருமபுரி மாவட்டத்தில் இம்முகாமானது தருமபுரி கோட்டத்தில் உள்ள நல்லம்பள்ளி, பென்னாகரம், கம்பைநல்லூர், மொறப்பூர், கிருஷ்ணாபுரம் பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய இடங்களிலும் கிருஷ்ணகிரி கோட்டத்தில் வேப்பணப்பள்ளி, கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை, மத்தூர், காவேரிப்பட்டணம், பாலக்கோடு ஆகிய இடங்களிலும், ஒசூர் கோட்டத்தில் ஒசூர், பாகலூர், பேரிகை, சூளகிரி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை, தளி ஆகிய இடங்களிலும் நடைபெற்றது.

முகாம் நடைபெறும் நாட்களில், கோட்ட அளவில் தினசரி காலை 8 மணி முதல் இரவு 12 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**காலை நிகழ்ச்சிகள்**

குழந்தைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துணவு வழங்குதல், கால்நடைகளுக்கு இலவச மருத்துவம்,



# தமிழக மாவட்டங்களும் தலைநகரங்களும்

1. சென்னை - சென்னை-600 005
2. வட ஆர்க்காடு-அம்பேத்கர் - வேலூர்-632 001
3. தென்னார்க்காடு - கடலூர்-607 001
4. திருச்சிராப்பள்ளி - திருச்சிராப்பள்ளி-620 008
5. இராமநாதபுரம் - இராமநாதபுரம்-623 501
6. திருநெல்வேலி-கட்டபொம்மன் - திருநெல்வேலி-627 009
7. கன்னியாகுமரி - நாகர்கோவில்-629 001
8. தர்மபுரி - தர்மபுரி-636 705
9. நீலகிரி - உதகமண்டலம்-643 001
10. காமராசர் - விருதுநகர்-626 001
11. திண்டுக்கல் அண்ணா - திண்டுக்கல்-624 001
12. நாகப்பட்டினம் காயிதேமில்லத் - நாகப்பட்டினம்-611 001
13. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். - காஞ்சிபுரம்-631 501
14. திருவண்ணாமலை சம்புவராயர் - திருவண்ணாமலை-606 601
15. தஞ்சாவூர் - தஞ்சாவூர்-613 001
16. புதுக்கோட்டை - புதுக்கோட்டை-622 001
17. மதுரை - மதுரை-625 020
18. சேலம் - சேலம்-636 007
19. பெரியார் - ஈரோடு-638 001
20. கோயம்புத்தூர் - கோயம்புத்தூர்-641 018
21. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் - சிவகங்கை-623 560
22. வ.உ. சிதம்பரனார் - தூத்துக்குடி-628 001

- தகவல்: அ. கந்தசுவாமி

இலவசக் கண் பரிசோதனை, முதியோர் ஓய்வூதியம் பெறத்தகுதியான நபர்களைத் தேர்வு செய்தல், வங்கிக்கடனுதவி பெற ஆலோசனைகள் வழங்கி மனுக்கள் பெறுதல், இலவச நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்க மனுக்கள் பெறுதல், மகளிர் மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளல், ஏழைகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்குதல், சுய தொழில் தொடங்குவோர்க்குத் தக்க ஆலோசனை வழங்குதல், குடும்ப நலம் - சிறுசேமிப்பு பற்றி, தக்க ஆலோசனைகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**பிற்பகல் நிகழ்ச்சிகள்**

தீண்டாமை, மதுவிலக்கு, சிறுசேமிப்பு, தேசிய ஒருமைப்பாடு, வரதட்சணை ஒழிப்பு, மகளிர் கல்வி, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல், சாலை விதிகள் கடைப்பிடித்தல், அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுதல் ஆகியவை பற்றி, பொதுமக்கள், அலுவலர்கள் அடங்கிய குழு விவாதம் நடைபெற்றது.

**மாலை நிகழ்ச்சிகள்**

கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், நாடகங்கள், விளையாட்டு, கரகம், காவடி மற்றும் அரசு சாதனைகளை விளக்கும் வீடியோ படக்காட்சிகள் நடைபெற்றன.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் தருமபுரி மாவட்டத்தில் தினசரி மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரே நேரத்தில் மூன்று இடங்களிலும் காலை நிகழ்ச்சியாக மேலே உள்ள நலத்திட்டப் பணிகளும், பிற்பகல் நிகழ்ச்சியாக 3 இடங்களில் குழு விவாதமும், இரவு நிகழ்ச்சியாக ஒரே நாளில் 16 இடங்களில் நாடகங்கள் வில்லுப்பாட்டு போன்றவைகளும், 48 இடங்களில் வீடியோ படக்காட்சிகளும் நடைபெற்றன.

## கால்நடைச் செல்வம்

**சமீபத்திய கணக்குப்படி, நாட்டில் மொத்தம் 192.8 மில்லியன் மாடுகள், 79.1 மில்லியன் எருமைகள், 44.9 மில்லியன் செம்மறி ஆடுகள், 100 மில்லியன் ஆடுகள், 10.7 மில்லியன் பன்றிகள், 253.7 மில்லியன் கோழி-வாத்து பறவை இனமும், சுமை தூக்கப் பயன்படும் 3 மில்லியன் கால்நடைகளும் உள்ளன.**

**இவற்றின் மூலம் நாம் அடையும் பல்வேறு பயன்களின் மதிப்பு ரூ.445 பில்லியன் (1990-91)! இது, நமது வேளாண் உற்பத்தியில் 25 சதவிகிதமாகும். இவற்றின் மூலம் (1991-92-இல்), நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாலின் அளவு 56.4 மில்லியன் டன்கள்; முட்டைகளின் எண்ணிக்கையோ 22,002 மில்லியன்; கம்பளி அறுவடை 43.4 மில்லியன் கிலோ!**

ஆக, முகாம் நடைபெறும் 7 நாட்களில் 21 இடங்களில் நலத் திட்டப்பணிகள் விளக்க முகாமும், 336 இடங்களில் வீடியோ படக்காட்சிகளும், 94 இடங்களில் கலை நிகழ்ச்சிகளும், தலைமையிடப் பொருட்காட்சியும் சேர்த்து, சிறப்புற நடைபெற்றன.

நலத்திட்ட முகாம்கள் நடைபெற்ற இடங்களில் பல்வேறு துறையின் மூலம் சிறிய அளவிலான கண்காட்சிகளும் நடைபெற்றன. அந்தச் சிறிய அளவிலான கண்காட்சியைப் பொதுமக்கள் மிகவும் ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.

அனைத்துத் துறையைச் சார்ந்த அலுவலர்களும் அதில் பங்கேற்று, தங்களது துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.

சம்பந்தப்பட்ட துறைகள் ஆற்றுகின்ற பணிகளை மக்கள் நேரில் கண்டு தாங்கள் அதன் மூலம் என்ன பயன்பெறமுடியும் என்பதை அறிந்து அரசு அலுவலர்களுடன் கலந்துபேசி நிவர்த்தி செய்து கொண்டனர்.

மாலையில் குழு விவாதத்திலும் அலுவலர்களும், மக்களும் கலந்துரையாடினர். மக்கள் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினர். அலுவலர் அதற்கான தகுந்த விளக்கம் அளித்தனர். முகாம் நடைபெற்ற எல்லா இடங்களிலும் கூட்டம் நடத்தப்பட்டது. மக்கள் திரளாக

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தலைநகரில் நடைபெற்ற பொருட்காட்சி மற்றும் கோட்ட அளவில் நடைபெற்ற சிறிய பொருட்காட்சி ஆகியவற்றில் 30-க்கு மேற்பட்ட அரசுத் துறைகளும் அதைச் சார்ந்த அலுவலர்களும்-இடைவிடாது நடந்த ஒரு வார கால முகாமில் பங்கேற்றுச் சிறப்பாகச் செய்தனர்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறையைச் சார்ந்த அலுவலர் அதிக அளவில் இதில் ஈடுபட்டு முகாம் ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

அரசுத் திட்டப் பணிகள் விளக்க முகாம் தொடக்க விழா 18.7.92 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்கள் பொருட்காட்சியினைத் திறந்து வைத்து விழாச் சிறப்புரையாற்றினார். மேலும் விழாவில் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் திட்டப்பணிகள் விளக்க முகாமினைத் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி, விழாப் பேருரையாற்றினர். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. சிங்காரம், டாக்டர் வி. புருஷோத்தமன், திரு. கே.ஏ. மனோகரன், திரு. எம். வெங்கடராமரெட்டி ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் அவர்கள் நன்றி கூறினார்.

அரசு திட்டப் பணிகள் விளக்க முகாம் நிறைவு விழா 26.7.92 அன்று நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். செய்தி சுற்றுலாத்துறைச் செயலர், திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சிறந்த அரங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

இந்நிறைவு விழாவில், தமிழ்நாடு அரசு சிறப்புப் பிரதிநிதி (புதுடில்லி) மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே.வி. தங்கபாலு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு. இரா. நடேசன் அவர்கள் நன்றி கூறினார்.

- மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி

## உதவி

**எண்ணூரில் உள்ள புதிய துறைமுகத்தை மேம்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.559.25 கோடி நிதி உதவி அளிக்கும். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக் கரியை எடுத்துச் செல்ல இத்துறைமுகம் பயன்படுத்தப்படும். இந்த நிதியுதவியைத் தவிர, எண்ணூர் துறைமுகத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.450.45 கோடியை அளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரதீப் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் இவ்வங்கி ரூ.559.89 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இந்தியாவில் உள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதற்கு டச்சு அரசாங்கம் தொழில்நுட்ப உதவியினை நல்கும்.**

**நன்றி 'தூவானம்'.**

## அரசு மருத்துவமனைகளில் மறுவாழ்வு மையங்கள்



**குடிப்பழக்கம் என்பதும் ஒரு நோய்தான். விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இந்தக் குடிப் பழக்க நோயைக் குணப்படுத்தும் சக்தியும் தற்போது ஏற்பட்டுள்ளது.**

**மது மற்றும் போதை மருந்து பழக்கத்துக்கு ஆளானவர்களை அப் பழக்கத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அரசு மருத்துவமனைகளில் மறுவாழ்வு மையங்கள் விரைவில் அமைக்கப்படும்.**

**எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இத்தகைய மையங்கள் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த மையத்தில் மருத்துவர்கள், சமூகநல ஊழியர்கள் உட்பட பல்வேறு வகையான மருத்துவத்துறை உதவியாளர்கள் இருப்பார்கள். நடப்பு ஆண்டிலேயே இந்த மையங்கள் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.**

# விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்கள்



நமது நாடு ஒரு விவசாய நாடாகும். விவசாயமே நமது நாட்டின் மிகப் பெரிய தொழில் ஆகும். விவசாயத்தில் நமது நாட்டில் 70 சதவிகிதம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் மொத்த வருவாயில் முதலிடம் வகித்து வந்த வேளாண்மைத்துறை இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தோடு, வேளாண்மை போட்டியிட இயலவில்லை.

நாம் வேளாண்மையில் தன்னிறைவு பெறப்புதியபுதியஉத்திகளைக் கையாள வேண்டியுள்ளது. புதிய கன்னிப் பிரதேசங்களைப் பாசனப் பகுதியில் கொண்டுவருவதால், புதிய புதிய பாசன முறைகளைப் பயன்படுத்தி பாசன நீரைச் சேமித்துப் பாசனப் பகுதியைப் பெருக்கி, விளைச்சலைப் பன்மடங்குபெருக்கினாலும் வேளாண்மையில் இயந்திரத்தை உபயோகிப்போரின் பங்கு குறைவாக இருப்பதால் நாம் நமது இலட்சியக் கனவை நனவாக்க இயலவில்லை. அதனால் வேளாண் தொழில் மிகக்கடினமான தொழில் என்ற கருத்தையே நமது மக்கள் கொண்டுள்ளனர். அதனாலேயே விவசாயம் ஒரு பரம்பரைத் தொழிலாகத்தான் வளர்ந்து வருகிறது.

புதியவர்கள் வேளாண்மையில் நாட்டம் இல்லாமல் உள்ளனர். வானம் பொய்த்து விடுவதாலும், வேளாண்மை முறையின்றி உள்ளதாலும் விவசாயப் பெருமக்களே, பெரும்பாலும் இளைய தலைமுறையினரே நகரத்தை நோக்கி – வேறு தொழிலை நாடுகின்றனர்.

வேளாண்மையில் உள்ள பல்வேறு இடர்ப்பாடுகளை உணர்ந்த வேளாண் பொறியியல் வல்லுநர்கள், வேளாண் தொழிலை இலகுவாக மாற்றத் தேவைப்படும் பல்வேறு இயந்திரங்களை வேளாண்மையில் புகுத்தியுள்ளனர். வேளாண்மைக்குத் தேவைப்படும் முதல் மூன்று முக்கிய மூலப்பொருளான நிலம், நீர், விதை இவை மூன்றிலும் இயந்திரத்தின் மூலம் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தி வேளாண் தொழிலை இலகுவான தொழிலாக மாற்றிய தோடு அல்லாமல், வேளாண்மைத் தொழிலைப்பற்றி இளைய தலைமுறையினரிடையே கொண்டுள்ள ஒரு தவறான கருத்தைப் பெருமளவு மாற்றியுள்ளது. முறையான நேரத்தில் வேளாண் பொறியாளர்கள் ஆற்றிய பங்கு பெருமளவு போற்றதக்கதாகும்.

நமது இளைய தலைமுறையினரிடையே, வேளாண்மைத் தொழிலில் நம்நாடு தன்னிறைவு அடைய முடியும், அடையச் செய்யலாம் என்ற ஒரு நம்பிக்கை எழுந்துள்ளது.

### வேளாண் தொழிலில், பொறியாளரது பங்கு என்ன?

வேளாண் தொழிலுக்குத் தேவைப்படும் நிலம், நீர், பயிர் (அ) விதை, மனித ஆற்றல் இவை அனைத்தும் நம் நாட்டில் தேவையான அளவு உள்ளன. ஆனால், தேவைப்படும் நேரத்தில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் வேளாண் தொழிலைச் செவ்வனே செய்ய இயலாது. இவை நான்கும் முறையற்றுப் பிரிந்திருந்தாலும், சேர்ந்திருந்தாலும் நினைத்த இலக்கை அடைய இயலாது. இந் நான்கின் சரிவிகிதச் சேர்ப்பினால் ஒரு நாட்டின் வரலாற்றை மாற்றி அமைக்க முடியும்.

வேளாண்மைக்கு அடிப்படையானது நிலம். நிலம் நல்ல முறை

யில் பண்படுத்தப்பட்டபிறகே விவசாயம் செய்ய இயலும். மேடான நிலத்தைச் சமன் செய்ய மண்தள்ளு இயந்திரம் (புல்டோசர்) பயன்படுகிறது. மனித ஆற்றலைப் பயன்படுத்திச்சமன் செய்ய ஆகும் செலவையும், நேரத்தையும் விட மூன்றில் ஒரு பங்கு நேரமும், செலவுமே புல்டோசர் மூலம் ஆகும். மேலும், மனித ஆற்றலின் மூலம் சமன் செய்வதை விட மிகத் துல்லியமாக , விரைவாகச் சமன் செய்ய புல்டோசரால் ஏதுவாகும். தோட்டப்பயிர் பயிரிடப்படும் நிலங்களைச் சமன் செய்வதால், நிலம் சிறிதளவும் வீணாகாமல் விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்ற இயலும்.

புல்டோசரால் சமன் செய்யப்பட்ட நிலத்தைப் பண்படுத்த உருவாக்கப்பட்ட இயந்திரம் உழுவை இயந்திரமாகும். உழுவை இயந்திரம் விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். நன்செய் நிலமானாலும், புன்செய் நிலமானாலும் பொன் னிலமாக மாற்றுவது உழுவை இயந்திரமாகும்.

உழுவை இயந்திரத்தின் கருவிகளான தட்டுக் கலப்பை, கொத்துக் கலப்பை போன்ற கருவிகளை உபயோகித்து கன்னி நிலத்தை, விளை நிலமாக மாற்ற இயலும். 6 ஜதை மாடு கட்டி இருசால் ஏர் உழ, ஒரு ஏக்கருக்குச் சுமார் 6 மணி நேரம் ஆகும். ஆனால் 4 ஏக்கர் நிலத்தை உழ, இயந்திர உழுவை உதவியினால் சுமார் 8 மணி நேரத்தில் முடித்துவிடலாம். நேரமும் செலவும் மிகமிகக் குறையும். மேலும், விவசாயத்தில் அனைத்துப் பணிகளும் பருவத்தை முடிக்க வேண்டி இருப்பதால், இயந்திர உழுவை ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது.

கன்னி நிலத்தை ஆழப் பிளந்து நன்கு உலர வைத்தல் வேண்டும். அதன் பின்னரே அதை நன்கு உழுது விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்ற முடியும். ஒரு பருவமழை வந்த பின்னர், மாடு கட்டி பூமியைப் பிளந்து காய்தலும், மறுபடியும் ஒரு பருவ மழை வந்த பின்னர் நன்கு உழுதலும், மறுபடியும் நன்கு காய்தலும் அவசியம். அடுத்த மழை வந்த பிறகே பயிர்ச் சாகுபடிக்குப் பக்குவமாக இருக்கும். இரு பருவ மழைக்கு (அல்லது) ஏறக்குறைய ஓராண்டிற்குப் பிறகே நிலத்தைப் பக்குவமாக மாற்ற இயலும், அதாவது நிலத்தடி நீரை உபயோகப்படுத்த முடியாத இடத்தில் ஓராண்டு ஆகும். நிலத்திலுள்ள ஈரப்பதத்தைப் பொறுத்தே மாடு கட்டி உழ இயலும். ஆனால், இயந்திர உழுவையில், தட்டுக் கலப்பை மாட்டிப் பூமியைப் பிளந்து நன்கு புரட்டுவது, மிக மிக எளிதானது. ஈரப்பதம் அதிகமாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஓரிரு நாட்கள் காய்ந்த பிறகு கொத்துக் கலப்பையை மாட்டி பெருந்துகள்களை மிக மிகச் சிறிய துகள்களாக உடைத்து, விவசாயத்திற்கு ஏற்றமுறையில் மாற்ற இயலும். கன்னி பூமியை, விளை நிலமாக மாற்ற ஒரு வாரம் போதுமானது.

அதேபோல நன்செய் நிலத்தை நன்கு உழுது நிலத்தைப் பயிர் செய்ய சேறு ஆக்க வேண்டும். இதற்கு மாடு கட்டி கலப்பை ஓட்டினால், குறைந்தது 15 நாட்களாவது வேண்டும். ஆனால், சக்கரக் கலப்பை கொண்டு ஒரே மணி நேரத்தில் நன்கு நிலத்தைக்குழைத்து சேறாக்க இயலும். இயந்திர உழுவையில் முதல் உழவு மற்றும் இரண்டாம் உழவு மிக எளிதாக்கப்படுகிறது. அதனால், விவசாயம் என்பது பரம்பரைத் தொழில் என்ற வரைமுறையிலிருந்து விலகி, அனைவரும் நாடும் வண்ணம் ஏற்றதாக இயந்திர உழுவை மாற்றுகிறது.

இதைத்தவிர இயந்திர உழுவையைக் கொண்டு ஆழமற்ற கிணறுகளிலிருந்து நீர் இறைக்கவும், உரம் மற்றும் விளைபொருள் இவைகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் உபயோகப்படுத்தலாம். இயந்திர உழுவைக்கு, விவசாயத்தில் பணியில்லாக் காலங்களில், மற்ற பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதால் உபரி வருமானம் அதிகரிக்கிறது.

இயந்திர உழுவையில் முதலீடு அதிகம் என்றால் மாற்று வழியாக சிறிய பவர்டில்லர்களை உபயோகப் படுத்தலாம். இதற்கு முதலீடு குறைவு: ஆனால், டிராக்டருக்குரிய அத்தனைச் சிறப்புகளும் இதற்குண்டு.

இதைத்தவிர, இயந்திர உழுவையினால் நிலத்தை ஓரளவு சமன் செய்தல், பரம்படித்தல் ஆகிய வேலைகளுக்கும் உபயோகித்துக் கொள்ளலாம். சுருங்கக் கூறினால், இயந்திர உழுவை விவசாயத்தை இயந்திர மயமாக்க உதவும் ஓர் அடிப்படை இயந்திரமாகும்.

விவசாயத்திற்கு நிலம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல நீரும் மிக முக்கியமான மூலப்பொருளாகும். மனிதன் கவலை ஏற்றம் கட்டி நீர் இறைத்த காலம் போய், நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் தேவையான நீரை மிக மிக ஆழ் துளைக் கிணறுகளிலிருந்து மேலேற்றி, பயிருக்குப் பாய்ச்சப்படுகிறது. ஆதலால், மழை பொய்த்துவிடினும் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் ஆழத்திலுள்ள நீரை மேலேற்றி பாசனம் பண்ண இயலும் என்ற ஓர் நம்பிக்கையை மக்களிடையில் ஊட்ட முடிந்ததால், விவசாயம் அனைவரும் நாடும் தொழிலாக மாற்ற முடிந்தது.

நீர் இறைக்கும் இயந்திரம் விவசாயத்திற்குக் கிடைக்கப்பெற்ற மற்றுமோர் அரிய வரமாகும். அதனால், கவலை மற்றும் ஏற்றம் கூட்டி இறைப்பதற்கு வசதியாகப் பெரிய விட்டமுள்ள, குறைந்த ஆழமுள்ள திறந்த வெளிக்கிணறு அமைப்பதை விட்டுவிட்டு, நீர்த்



''இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டில் மகத்தான ஒரு சமுதாயப் புரட்சி தமிழ்நாட்டில்தான் நடந்திருக்கிறது. திராவிடர் கழகத் தலைவர் பெரியார்தான் அந்தப் புரட்சியைச் செய்தவர் என்பது அமெரிக்காவிலுள்ள மூத்த பேராசிரியர்களின் கருத்து ஆகும்''.

- அமெரிக்கப் பேராசிரியர் ஜான்ரைவி.

(ஆதாரம்: 'ஆனந்த விகடன்' 16.7.1972)

தேவைக்கேற்றபடி மிக மிக ஆழமுள்ள குழாய்க்கிணறுகள் அமைக்க முடிந்தது. திறந்தவெளிக் கிணறு அமைக்கும் செலவு மற்றும் நேரத்தை விட, ஆழ்துளைக் கிணறு அமைக்க ஆகும் நேரம் மற்றும் செலவு மிக மிகக் குறைவு. நீர் கிடைக்கும் ஆழத்தைப் பொறுத்து நீர் மூழ்கி இறைக்கும் இயந்திரம் அல்லது சாதாரண நீர் இறைக்கும் இயந்திரம் ஆகிய வற்றைப் பொருத்திக் கொள்ளலாம்.

இதுமட்டுமல்லாமல், கிடைக்கும் நீரை நன்செய் மேட்டு நிலத்திற்கும் எடுத்துச் சென்று குழாய் மூலம் பாசனம் செய்வதற்கு முயலுவதால் நீர்ப்பாசனம் என்பது இளம் பாலகனுக்கும் புரிந்த, இயலுகின்ற ஒன்றாக முடிகிறது. நீர் இறைக்கும் இயந்திரம் இருப்பதால், மழை இல்லாவிடினும், ஓர் ஆழ்துளைக் கிணறு அமைத்து, நிலத்தின் எந்த மூலைக்கும், எந்த மேட்டுக்கும் நீர் பாய்ச்ச முடியும். அதனால், மானாவாரி சாகுபடி என்ற பிரிவு இனி வருங்காலத்தில் தோட்டப் பயிர்ச் சாகுபடிப் பிரிவு என்று மாறும். மானாவாரிச் சாகுபடி என்ற சொல்லே பழக்கத்திலிருந்து அறவே விடுபடும் என்பதில் சிறிதளவும் ஐயமேயில்லை.

இதற்கும் ஒருபடி முன்னேறி இன்று பாசனம் மிக மிக எளிதாக்கப்பட்டுவிட்டது. கிடைக்கும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய பாசன முறைகளான, தெளிப்புப் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், இரட்டைக் குழாய் நுண்பாசனம் என்று முன்னேறியுள்ளது. பயிருக்கு நீர்த் தேவையான வேர்ப் பகுதியில் பாசனம் செய்யப்படுவதால், நீர்த் தேவை மிக மிகக் குறைகிறது. அதனால், அதிகப்படியான நிலத்தைச் சாகுபடியின் கீழ் கொண்டுவர முயலுகின்றது. இதைத் தவிர, இச் சிக்கனப் பாசன முறையிலேயே உரம் மற்றும் மருந்துகள் பயிருக்கு அளிக்க முடிவதால் 'ஒரே கல்லில் இரு மாங்காய்' என்ற பழமொழி பழைய மொழியாகி, இன்று 'ஒரே கல்லில் பல மாங்காய்' என்று நம்மால் பல இடத்தில் அடிக்க இயலுகிறது.

இன்று பாசனம் என்ற ஒரு சொல் 'பயிர்களுக்கேற்றவாறு பாசனம்' என்று பலவகையாகப் பிரிந்து பாசனத்தில் நம்நாடு ஓர் நுணுக்கமான அறிவைப் பெற்றிருக்கிறது.

**பால்**

**உலகில், அதிகக் கால்நடைகளைக் கொண்டிருக்கும் நாடு என்ற பெருமை நமக்கு உண்டு. பால் உற்பத்தியில் உலகில் மூன்றாவது இடத்தை இந்தியா வகிக்கிறது. *1980-81*-இல் *3.16* கோடியாக இருந்த பால் உற்பத்தி, *1990-91*-இல் *5.37* கோடி டன்களாக அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆண்டுதோறும் 40 இலட்சம் கறவை மாடுகள் அதிகம் தேவைப்படுகின்றன. இதற்கு ஆண்டுக்கு 3 கோடி கால்நடைகளைக் கருவுறச் செய்யவேண்டும்.**

**பயிர்**

விவசாயத்திற்குத் தேவையான மற்றொரு மூலப்பொருள் விதையாகும். நல்ல விதை நல்ல விளைச்சலைக் கொடுக்கவல்லது. நல்ல விதையை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க நம்மால் முடியும். வேளாண் பொறியாளரது உதவியால் நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க முடியும். விதைப் பிரிப்பு இயந்திரம் மற்றும் விதைச் சுத்திகரிப்பு இயந்திரம் இவற்றை உபயோகிப்பதால் நல்ல விதைகளைத் தேர்ந்தெடுக்க இயலும். அதனால் நல்ல விளைச்சலைப் பெற இயலும், நல்ல விதையைத் தேர்ந்தெடுத்த பிறகு விதைக்கும் இயந்திரம் (Seed Drilles) மூலமாகச் சிலவகை எண்ணெய்ப் பயிர்களை விதைக்க இயலும். அதனால் ஆட் கூலியும், வேலையும் மிக மிகக் குறைகிறது. பயிருக்குப் பயிர் விட வேண்டிய தூரம் மிகத்துல்லியமாகப் பராமரிக்க முடியும். போதுமான இடைவெளி இருப்பதால் நல்ல விளைச்சலைப் பெறமுடிகிறது.

பயிர் நன்கு வளர்ந்த பின், மருந்து தெளிப்பதற்குப் பாசன முறையில் அன்றி ஸ்பிரேயர் மூலமாகவும் மருந்து தெளிக்கலாம். அதனால் மருந்து எல்லாப் பயிர்களுக்கும் ஒரே சீராகத் தெளிக்க முடிகிறது. கையினால் தெளிக்க முடியாத மருந்துகளை ஸ்பிரேயர் மூலமாகத் தெளிப்பதால் விவசாயிகளுக்கு உண்டாகும் ஆபத்தைத் தவிர்க்க முடிகிறது. நேரமும், செலவும் மிச்சமாகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பயிர் அறுவடைக்குத் தயாராகும் போது, அறுவடை இயந்திரம் மூலம் அறுத்தெடுத்து, தானியத்தை தனியாகப் பிரித்தெடுக்கலாம். அதே போல எண்ணெய் வகைப் பயிரான மணிலாக் கொட்டையைப் பிரித்தெடுக்க இயந்திரம் உள்ளதால் பல நாட்கள் மனிதன் செய்ய வேண்டிய வேலையை இயந்திரம் சிலமணி நேரத்தில் முடித்து விடுகிறது.

அறுவடைக்குத் தயாரான பயிர்களை அறுத்தெடுத்து தானியத்தை உமி மற்றும் தோலிலிருந்து பிரித்தெடுத்து தரம் வாரியாக மெருகேற்றிப் பிரித்து மூட்டை கட்டிப் போடுமளவிற்கு இன்று இயந்திரங்கள் மார்க்கெட்டில் குவிந்துள்ளன. அவற்றை உபயோகிப்பதால் அறுவடை முடிந்த அடுத்த நாளில் சந்தைக்குத் தானியத்தையோ, பயிர்வகைகளையோ அனுப்ப முடியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

நமது விவசாயிகள் இன்னும் சிறிதளவு மனம் மாறி விஞ்ஞானத்தோடு ஒன்றுபட்டு முன்னேறத் தயாரானால் நாற்று நடவும், களையெடுக்கவும் இயந்திரங்கள் மார்க்கெட்டில் குவிந்து விடும். அவர்களது வேலை மிக மிக எளிதாக்கப்பட்டு விடும். அதனால் அவர்களது மீதியுள்ள மனித உழைப்பை, இயந்திரங்கள் இல்லாத பகுதியில் செலவு செய்ய முன்வருவார்களானால், நமது நாட்டில் பொருளாதாரம் மற்ற நாட்டின் பொருளாதாரத்தை மிஞ்சி, பொறாமைப்படத்தக்க வகையில் அமையும்.

**மனித ஆற்றல்**

ஒரு காலத்தில், விவசாயம் முழு அளவு மனித ஆற்றலை நம்ப வேண்டியிருந்தது. விவசாயம் பருவத் தொழில் ஆகையால் கூலியாட்கள் கட்டுப்பாடு அதிகம் இருந்தது. ஆனால், இன்று வளர்ந்துள்ள சமுதாயத்தில் இயந்திரத்தின் பங்கு அதிகமாகி மனித ஆற்றலின் பங்கு மிக மிகக் குறைந்துள்ளது. மிகக் குறைந்த மனித ஆற்றலைப் பயன்படுத்தி, பல ஏக்கர் பண்ணை



## நினைத்ததைச் சாதிக்கும் நேர்மைவாதி!

நமது மாபெரும் தலைவர் பெரியார் தமக்குச் சரியெனப்பட்டதை எவருடைய தயவு தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாது, பட்டவர்த்தனமாகச் சொல்லுவார். அது மற்றவர்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ அதைப் பற்றி அவருக்குக் கவலையே கிடையாது. தம் கருத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன எண்ணுவார்களோ என்ற பயம், அவருக்கு இருப்பதே இல்லை.

பெரியார் தாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. அவருடைய அபிப்பிராயங்கள் ஆணித்தரமானவை. ஆனால், அவர் பிடிவாதக்காரரல்ல. தம் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக, நேர்மையான வழியிலேயே பாடுபடுவார்.

—சர் ஏ.டி. பன்னீர்செல்வம்

யில் விவசாயம் மிக இலாபகரமாகச் செய்யலாம் என்ற உண்மையை இன்று உலகம் உணர்ந்துள்ளது. இதனால் நேரமும், செலவும் மிக மிகக் குறைகிறது. விவசாயத்தில் பயன்பட்ட மனித ஆற்றலை மற்ற தொழில்களில் ஈடுபடுத்த ஒரு வாய்ப்பை இன்றைய இயந்திரங்கள் மனித சமுதாயத்திற்கு அளித்துள்ளன. இதைத் தவிர விவசாயத்தில் பயன்படக்கூடிய இயந்திரங்களைப் பராமரிக்க, பழுதுபார்க்க வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இன்றைய விவசாயத்தில் இயந்திரத்தின் ஆற்றலே, மனித ஆற்றலை விட அதிகமுள்ளது என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை.

'பட்டம்' என்ற குறுகிய வட்டத்தை விட்டு விவசாயம் இன்று வெளி வந்துவிட்டது. இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் விவசாயத்தில் ஓராண்டுப் பயிர் என்ற நிலை மாறி 90 நாட்கள் பயிர் என்று ஆண்டு 3 போகம் நல்ல விளைச்சலை நாம் பெற முடிகிறது எனில், அவற்றிற்குப் பெருமளவு காரணம் விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்களேயாகும். விஞ்ஞானத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது. புதிய புதிய உத்திகள், இயந்திரங்கள் கண்டுபிடிப்பதன் மூலம் வேளாண் சமுதாயத்தின் வேலை மிக மிக எளிதாக்கப் படுகிறது. வேளாண் விவசாயிகளும், இதை உணர்ந்து, விஞ்ஞானத்தோடு ஒன்றுபடத் தயாரானால் களர் மேட்டையும் புதிய பாசனமுறைகள் மூலம் நல்ல விளைநிலமாக்கலாம். ஐந்து ஏக்கரில் பத்து ஏக்கருக்கு உண்டான விளைச்சலைப் பெறலாம்.

இவ்வியந்திரங்களின் பலனை அதிகம் பெற வேளாண் மக்கள் முன் வரவேண்டும். நமது பயிர்ச் சாகுபடிப் பரப்பு நமது வேளாண் மக்களிடத்தில் சிறிய சிறிய பரப்புகளாகப் பிரிந்து இருக்கின்றன. சிறு விவசாயிகளும், குறு விவசாயிகளும் மொத்த சாகுபடிப் பரப்பில் 75 சதவகிதம் உள்ளனர். இவர்கள் தங்களிடம் ஒற்றுமை இல்லாத காரணத்தால், இவ்வியந்திரங்களில் தனித்தனியே முதலீடு செய்து உபயோகப்படுத்துவது என்பது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. இவர்கள் இதன் பயனை நன்கு உணர்ந்தாலும், தங்களது நிதி நிலைமையைக் கருத்தில் கொள்வதால், இயந்திரங்களின் பலன் இவர்களுக்கு ஒரு எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. இதை நன்கு உணர்ந்த நமது அரசும், மண் தள்ளும் இயந்திரம், உழுவை மற்றும் தேர்வு செய்யப்பட்ட கருவிகளை மட்டும் வேளாண் பொறியியல் துறை மூலம் மிகக் குறைந்த வாடகைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தது. தற்சமயம் மேற்கூறிய இயந்திரங்களுக்கு வேளாண் மக்களிடத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. அதன் பலனை நன்கு உணர்ந்த விவசாயிகள் வங்கியின் மூலம் நிதி ஆதரவு பெற்று மிக முக்கிய இயந்திரங்களை, பொதுவாக உழுவையை வாங்கிப்பலனை அடைகின்றனர்.

இன்றைய விவசாயிகளின் பிரச்சினையை உணர்ந்த அரசு வேளாண் பொறியியல் துறையின் மூலம், சிறு, குறு விவாசாயிகளை ஒன்றுபடுத்தி, அவர்களது தொழிலுக்கு அடிப்படைத் தேவையான நீரை அவர்களுக்கு அளிக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் சமுதாயக் கிணறுகளை அமைத்து, ஒரு முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளது.

இதேபோல, சிறு, குறு விவசாயிகள் ஒன்றுபட்டு அரசிடமிருந்து, விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்களைப் பெற்று அதன் பலனைப் பெறுவார்களேயானால், தமிழகத்தில் வேளாண்மையில் தன்னிறைவு பெறுவோம். நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு ஓர் முன்னோடியாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இராமு. சக்திவேலு, பி.இ.,
செயற் பொறியாளர் (வே.பொ.)
மற்றும்
பி.வி. சுப்பிரமணியன், பி.இ.,
உதவிப் பொறியாளர் (வே.பொ.)
சென்னை.

# சிக்கனமே சீரான வாழ்வு

சிக்கனந்தான் சிறந்ததொரு வாழ்வளிக்கும்
சிந்தையில் கொண்டுவிட்டால் உயர்வளிக்கும்
எக்கணமும் அதன்வழியே சிறந்ததாகும்
என்றுமில்லை துன்பமென்று மகிழ்ந்திடலாம்

வரவுக்குள் செலவுதனை அடக்கவேண்டும்
வகையற்ற செலவுகளை முடக்கவேண்டும்
பரவுகின்ற ஆசையை விலக்கவேண்டும்
பகுத்தறிவால் வாழ்வுதனைத் துலக்கவேண்டும்

பெருமைக்கு வழிவிட்டு அலையவேண்டாம்
பெருந்துன்பம் கொண்டுநிலை குலையவேண்டாம்
வரும் பொருளின் அளவுதனை அறியவேண்டும்
வந்ததற்குள் நம்வாழ்வை நடத்தவேண்டும்

வீட்டுக்குள் சிக்கனத்தை வளர்க்கவேண்டும்
விளைகின்ற நன்மையை உணரவேண்டும்
நாட்டுக்கும் அவ்வழியே நன்மையாகும்
நம்மவர்கள் கடைப்பிடித்து வாழவேண்டும்

—கவிஞர் பூவேந்தன்



## மாணவர் பக்கம்:



# மயிலே! மயிலே!

இந்தியாவின் தேசியப்பறவை மயில் என்று உங்களுக்குத் தெரியும்.

மயில்களில் இரண்டு வகை உண்டு. இந்தியாவிலும், இலங்கையிலும் காணப் படும் மயில் நீல மயில் என்றும், மலேசியா, இந்தோனேஷியா முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் காணப் படும் மயில், பச்சை மயில் என்றும் அழைக்கப்படுகிறது.

பச்சை மயிலுக்கே மதிப்பு அதிகம். அதாவது, அந்த மயிலுக்கே விலை அதிகம். நன்கு தோகை வளர்ந்த ஒரு இணை மயில்களின் விலை எவ்வளவு தெரியுமா? சுமார் 28,000 ரூபாய்!

பச்சை மயில்களின் வண்ணத் தோகை கண்ணைப் பறிக்கும். இதில் ஆண்-பெண் இரண்டும் அடங்கும். ஆனால், இந்தியாவில் உள்ள நீலமயில் வகையில் ஆண் மயில் மட்டுமே அழகு டையது- வண்ணத் தோகை கொண்டது. பெண் மயிலின் வண்ணம் சுமாராகத் தான் இருக்கும்.

பிரிட்டனில், நாரிச் எனும் நகருக்கு அருகில் மிகப் பெரிய மயில் பண்ணை உள்ளது. இங்கு ஆயிரம் மயில்கள் உள்ளன.

ஐரோப்பாவில், மயில்களைச் செல்லப் பறவைகளாக வளர்க்கிறார்கள்.

—ஆதாரம்: தினமணி



# எல்லாரும் ஒன்று

(மயிலை முத்தெழிலன்)

இந்தியா என்பது நம்நாடு;  
இன்பத் தமிழகம் நம்வீடு!  
இந்தியப் புகழைத் தினம்பாடு;  
இந்தியங் காக்கப் பாடுபடு!

ஆற்றுச் செல்வம் நமக்குண்டு;  
அன்னைத் தமிழோ கற்கண்டு!  
ஏற்றம் கொண்ட குறளுண்டு;  
எண்ணிலா இயற்கை வளமுண்டு!

நல்லவர் வழியில் சென்றிடுவோம்  
நம்பகை யாவும் வென்றிடுவோம்!  
எல்லாரும் ஒன்றென வாழ்ந்திடுவோம்;  
என்றும் மகிழ்வில் ஆழ்ந்திடுவோம்!





# நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே நேரத்தைச் செலவிடுங்கள்!



## மாண்புமிகு முதல்வர் உரை

**தூ**ய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், இந்தப் பள்ளிக்கூடம், எனது 'தாய் வீடு' போன்றது. எனது வாழ்வில் மகிழ்ச்சியான நாட்கள் பலவற்றை, நான் இங்குக் கழித்திருக்கிறேன்.

அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது 1964-ஆம் ஆண்டு நடந்த விளையாட்டு விழா. அதில் நான் ஒரு மாணவியாகக் கலந்துகொண்டேன். அத்துடன் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவிகளில், "சிறந்த மாணவி"க்கான சுழற் கேடயத்தையும் நான் பெற்றேன்.

சுமார் 28 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட போதிலும், அந்த இனிமையான நிகழ்ச்சி எனது நெஞ்சில் பசுமையாக உள்ளது.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் உயர் கல்வி பயில பெரிதும் விரும்பினேன். ஒரு கல்லூரியில் இடமும் கிடைத்தது. ஆனால், அந்த இளமையான வயதில் எனது குடும்பத்திற்குத் துணைபுரிய வேண்டிய பொறுப்பு எனது தோளில் விழுந்தது. அதனால், தொடர்ந்து படிக்க இயலவில்லை. இப்போது, முதலமைச்சர் என்ற முறையில், தமிழகத்தின் நிர்வாகத்தை நடத்திச் செல்லும் மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுள்ளேன்.

நாங்கள் படிக்கும்போது டெலிவிஷன், வீடியோ போன்ற மாணவ மாணவிகளின் கவனத்தைத் திசை திருப்பும் சாதனங்கள் இல்லை. இப்போது இதுபோன்ற ஏராளமான பொழுது போக்குச் சாதனங்கள் வந்துவிட்டன. இவற்றுக்கு மத்தியில் மாணவ-மாணவிகள் மணிக்கணக்கில் டெலிவிஷன், வீடியோவின் முன்பு உட்கார்ந்திருப்பதை அறிகிறேன். இது அவர்களின் உடலுக்கும், மனதுக்கும் கேடு விளைவிக்கும்.

எனவே, உங்களது நேரத்தை, அதிகப்பட்சம் நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே செலவிடுங்கள். மாணவப் பருவத்தில் படிப்பவைதான்



மனதில் நிறையும். அது, உங்கள் வாழ்வின் இறுதி வரை துணை நிற்கும். நான், இன்று வரையில் ஒவ்வொரு இரவிலும் படிப்பதற்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கி வருகிறேன்.

கடந்த 1964-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதி எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்தின் சார்பில் சுழற்கேடயம் வழங்கப்பட்டது. ஆங்கிலத் திறமை, பொது அறிவு, விளையாட்டு, கலை நிகழ்ச்சி போன்றவற்றுக்காக அந்தக் கேடயத்தை நான் பெற்றேன்.

இப்படி ஒட்டுமொத்த திறமைக்கான பரிசைப் பெற்ற கடைசி மாணவி நான்தான் என அறிகிறேன். இதற்கான காரணம் இதுபோல் எல்லாத் திறமையும் ஒருங்கிணைந்த மாணவியாக யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இதுபோன்ற சிறந்த மாணவிகளை உருவாக்கி, அவர்கள் படிப்பை முடித்து வெளியேறும்போது, சுழற்கேடயம் வழங்கும் முறையை மீண்டும் கொண்டுவந்தால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இதற்கான கேடயத்தை நானே வழங்குகிறேன்.

அத்துடன், எனது சொந்தப் பணத்தில் இருந்து ஒரு இலட்ச ரூபாயைப் பள்ளிக்கூடத்திற்காக வழங்குகிறேன்.''

**(தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விளையாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 29.8.92 அன்று ஆற்றிய உரை)**

## பொன்மொழிகள்

**மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடு அடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.** - தந்தை பெரியார்.

**நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.**

- பேரறிஞர் அண்ணா.

**உண்மை, அன்பு, மனத்தூய்மை இவற்றை எதிர்க்க எதனாலும் முடியாது. நீ மனத் தூய்மை உள்ளவனாக, தன்னலமற்றவனாக, அன்பான வனாக இருந்தால், சாவைக்கூடக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை.**

- சுவாமி விவேகானந்தர்.

**உங்கள் வீட்டுத் திண்ணை சும்மா இருக்குமானால், அதை ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாற்றுங்கள். அது ஒரு கோவிலைக் கட்டியதற்கு ஒப்பாகும்.** - மூதறிஞர் இராஜாஜி.



# ஆசிரியர் தின விழா

மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவரும், இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவரு மான டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள், ஆசிரியர் தினமாக ஒவ் வொரு ஆண்டும் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இவ்வாண்டு ஆசிரி யர் தின விழா 5.9.1992 அன்று, சென்னைப் பல்கலைக்கழக நூற் றாண்டு விழா மண்டபத்தில் சிறப் பாக நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழா வில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு நல் லாசிரியர்களுக்கு விருதுகளையும், 1992 பொதுத் தேர்வுகளில் மாநிலத் தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சிறந்த மாணவ மாணவியருக்குப் பரிசுகளையும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றுப் பேசு கையில், ''ஆசிரியர் தினத்தை முன் னிட்டு ஒவ்வொரு தலைமையாசிரியர் மூலமாக அனைத்து ஆசிரியர்களுக் கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன்முறையாக வாழ்த்துரை அனுப்பியிருக்கிறார்கள். சமுதாயத் தில் உள்ள அனைவரும் ஆசிரியர் களைப் பாராட்ட வேண்டும், போற்ற வேண்டும் என்பதற்காகத்தான் ஆசிரி யர் தின விழா கொண்டாடப்படு கிறது. அரசின் சார்பில் மக்கள் ஆதரவோடு இந்த விழா நடை பெறுகிறது.

''மற்ற தொழில்களுடன் போல ஆசிரியர் தொழிலை ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. மாணவர்கள் அனைவரையும் அறிவுடையவர்களாக, ஆற்றல் உடையவர்களாக ஆக்கும் மகத்தான பொறுப்பு ஆசிரியர் களுக்கு உண்டு. எனவே, ஆசிரியர் பெருமக்கள் சமுதாயச் சேவையாக, மக்களுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி ஆசிரியர் பணியில் ஈடுபட வேண்டும். அன்புள்ளத்தோடு செய்யும் தொழில் ஆசிரியர் தொழில். ஆகவேதான், ஆசிரியர் களைப் போற்றுகிறோம். அவர் களது தன்னலமற்ற சேவைக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்''. என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர் களின் உரைக்குப் பின்னர், மாண்பு மிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களின் சார்பில் ஆசிரியப் பெரு மக்களுக்கு இரண்டு செய்திகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1. 1990-91, 1991-92 ஆகிய இரு ஆண்டுகளில் ஒப்பந்த அடிப் படையில் இடைநிலை, பட்டதாரி மற்றும் முதுநிலை ஆசிரியர்களை முந்தைய ஆட்சி நியமித்தது. அதை

# தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்துக்குப் பாராட்டு!

**1986**-87-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டில் 6 மாவட்டங்களில் டேனிடா திட்டத்தின் கீழ் முதல்கட்டப் பணிகள் நடைபெற்று வரு கின்றன.

இந்தத் திட்டங்களை டென்மார்க் நாட்டி லிருந்து வந்த டேனிடா திட்ட அலுவலர்கள் அண்மையில் தமிழகத்திற்கு வருகை செய்து பார்வையிட்டனர். மற்ற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டில் இந்தத் திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதாக இந்த அலு வலர்கள் பாராட்டு தெரிவித்தார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் கேட்டுக் கொண்ட தற்கிணங்க, டேனிடா திட்டத்தினைப் பிற மாவட் டங்களுக்கும் விரிவுபடுத்த டென்மார்க் நாட்டு அலுவலர்கள் இசைவு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற ரூ.15 கோடி நிதியுதவி வழங்க இந்தக் குழு உறுதி யளித்துள்ளது.

**பெண்களுக்குப் பயிற்சி:** இந்த டேனிடா 2-வது கட்ட திட்டத்தின்கீழ், மகளிர் பண்ணை மேம் பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இதன் படி அடுத்த ஏழு ஆண்டுகளில் ஆண்டுகளில் 70 ஆயிரம் பெண்கள் வீதம் சுமார் 5 இலட்சம் பெண்களுக்கு, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற விவசாயப் பணிகளில் பயிற்சி அளிக்கப் படும். பெண் விவசாய அலுவலர்கள் மூலம் இந்தப் பயிற்சியை அளிக்க அரசு பரிசீலனை செய்து வருவதாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

அன்று எதிர்க்கட்சியாக இருந்த எங்கள் அ.இ.அ.தி.மு.க. கட்சி எதிர்த்தது. வன்மையாகக் கண்டித் தது. ஒரே தகுதியுள்ள ஆசிரியர் களில் புதிதாக நியமிக்கப்படுபவர் களைக் குறைந்த சம்பளம் (தொகுப் பூதியம்) கொடுத்து வேலை வாங்கு வது கொத்தடிமை முறைக்குச் சமமாகும் என்று கண்டித்தோம். ஆகவே, ஒப்பந்த ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து வருகிறார்கள்.

2. நோய்வாய்ப்படும் ஆசிரியர் களுக்கு ஆசிரியர் சேமநல நிதி யிலிருந்து இதுவரை ரூ.950 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வரு கிறது. ஆனால், சில ஆசிரியர்கள் இருதய, சிறுநீரக மற்றும் புற்று நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற இந்தத் தொகை போதுமான தாக இல்லை. எனவே, இந்த உதவித் தொகையை ரூ.25 ஆயிர மாக உயர்த்துவது குறித்தும் மாண்பு மிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து வருவதாகக் கூறினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றுகையில், ''நாட்டில் எந்தக் செல்வத்தையும்விட சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அறிவுச் செல்வம் எந்த அளவுக்கு வளர்க்கப்பட்டிருக் கிறது என்பதைப் பொறுத்துத்தான் நாடு வளருகிறது. அறிவுத் திறனை மட்டும் வளர்த்தால் போதாது. ஆற்றல் திறனையும் வளர்க்க வேண் டும். அறிவியல் தொழில்நுட்ப அறிவியலாக மாற்றப்பட வேண்டும். குழந்தைகளை அறிவாளிகளாக ஆக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

1901-இல் தமிழ்நாட்டில் 100-க்கு 6 பேர்தான் எழுதப்படிக்க தெரிந் தவர்களாக இருந்தனர். ஆனால், இன்று 100-க்கு 64 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஆக்கப் பட்டு தமிழகம் எழுத்தறிவில் இந்தியா வில் இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது.

''தமிழக அரசு இந்த ஆண்டு கல்விக்காக ரூ.1,518 கோடி ஒதுக்கி யிருக்கிறது. மாநிலத்தின் வரு வாயில் 23 சதவிகிதம் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. ஆண்டுக்கு ஆண்டு ஆசிரியர்களின் வசதி வாய்ப்புகளும் வளர்ந்து வந்திருக் கின்றன. கல்வியின் மூலமாகத்தான் அறிவுச் செல்வத்தையும், ஆற்றல் செல்வத்தையும் நாம் பெறமுடியும். ஆசிரியப் பணியிலிருந்து விலகிய பிறகும் தங்கள் தொண்டு தொடர வேண்டும்.

பிறருக்கு எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் 228 ஆசிரியர்களுக்கு 'நல்லாசிரியர் விருது'களையும், 1992 எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பள்ளி (பிளஸ் 2) பொதுத் தேர்வுகளில் அதிக மதிப் பெண்கள் பெற்ற 193 மாணவ மாணவியர்க்குக் காசோலையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் ஆசிரியர் தேசிய நல நிதிக்கு, சென்னை மாவட்டத்தின் சார்பாக ரூ.4 இலட்சத்து 35 ஆயிரத்துக்கான காசோலையை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலசந்தர் இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சரிடம் வழங்கினார்.

முன்னதாக, கல்வித்துறைச் செயலர் திரு. வி. சங்கர சுப்பையன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. தி. நாச்சிமுத்து அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

விழாவில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி, அமைச்சர் பெரு மக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் ஏராளமான பள்ளிக் குழந்தைகளும் கலந்து கொண்டனர்.

முன்னதாக வண்ண உடை அணிந்த பள்ளி மாணவிகள் அமைச்சர்களை மலர்தூவி வர வேற்றனர். **ஜே. சந்திரன்.**



# நூற்றாண்டு விழாக் காணும் முன்னாள் மேயர் என். சிவராஜ்

ந.அ. கருணாகரன்

**1992**, செப்டம்பர் திங்கள் 29-ஆம் நாள், சென்னையின் முன்னாள் மேயர் ஆதிதிராவிட மக்களின் நல்வாழ்வுக்காக அரும் பாடுபட்ட மறைந்த பெரியவர் என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளாகும்.

அப்பொழுது சென்னை மாநிலத்தின் ஓர் ஊராகவும், இப்போது ஆந்திர மாநிலத்தில் உள்ள ஊராகவும் உள்ள கடப்பையில் 1892-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் நாள் பிறந்தார் என். சிவராஜ். இவரது தாயின் மூத்த சகோதரர் வி. ஜி. வேணுகோபால் இல்லம் கடப்பையில் இருந்தது.

மூன்று மாதங்கள் வரையில் கடப்பையிலும், பின்னர் சென்னை இராயப்பேட்டையிலும் வளர்ந்தார். நான்காம் வகுப்பு வரை வீட்டிலேயே பயின்று 1902-இல் சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் சேர்ந்து படித்து, வெஸ்லி கல்லூரியிலேயே இண்டர் மீடியட்டை முடித்து, சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டத்தையும், சென்னை சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டத்தையும் பெற்றார்.

வி.ஜி. வேணுகோபால் பிள்ளை அவர்களின் இளைய சகோதரர் வி.ஜி. வாசுதேவ பிள்ளையின் மகள், மீனாம்பாளை 1918 ஜூலை 10-இல் சிவராஜ் அவர்கள் திருமணம் செய்துகொண்டார். அவரது தாய் மாமன்களாகிய வேணுகோபால் பிள்ளை, வாசுதேவப் பிள்ளை இருவருமே நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்கள். சென்னை மாநகராட்சி, மீனாம்பாளின் தந்தையின் பெயரில் வட சென்னையில் வாசுதேவப் பிள்ளைத் தெருவையும், வாசுதேவப் பிள்ளைப் பூங்கா ஒன்றையும் அமைத்தது. சிவராஜ் அவர்கள் நீதிக் கட்சியில் சேர்ந்து தீவிரமாக ஈடுபட்டதற்குக் காரணமே அவரது தாய் மாமன்கள் தாம். அவரது செயல்பாட்டிற்கெல்லாம் அவரது மனைவி மீனாம்பாள் உறுதுணையாக நின்று ஊக்குவித்தார்.

1923-இல் திரு. சிவராஜ் சென்னைப் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக இருந்திருக்கிறார். மேலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் செனட் உறுப்பினராக விளங்கி, பணியாற்றி வந்தார். சென்னை சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியில் அமர்ந்து பின்னர் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். 1926 முதல் 1936 வரை சென்னை சட்டமன்றத்தில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினராக விளங்கி வந்தார்.

1929 ஆகஸ்ட் 25-இல் மதுரையில் நடைபெற்ற மதுரை மற்றும் இராமநாதபுரம் தென் இந்திய நல உரிமைச் சங்க இளைஞர் மாநாட்டிற்குத் தலைமையேற்றுச் சிறப்புரை ஆற்றினார். ஆந்திராவில், நெல்லூரில் 1929 அக்டோபர் 5,6 நாட்களில் திரு. எம். முனுசாமி நாயுடு தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் 11-வது மாநில மாநாட்டில் திரு. என். சிவராஜ் கலந்து கொண்டு, சர்.பி. பாத்ரோ, பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோரை ஆதரித்துப் பேசினார்.

ஆங்கில அரசு ஏழு அங்கத்தினர்கள் அடங்கிய சைமன் குழுவுடன் ஒன்பது இந்திய உறுப்பினர்களைக் கொண்ட இந்திய

**நான்காம் ஆட்டை சொல்லும் செய்தி:**

**சென்னையின் முன்னாள் மேயர், மறைந்த திரு. என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதெனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. சென்னை, இராயப்பேட்டையில் அவர் வாழ்ந்த ஆண்டித் தெருவுக்கு 'மேயர் சிவராஜ் வீதி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட திரு. என். சிவராஜ் அவர்களின் நினைவாக, சென்னையில் வெண்கலத்தால் செய்யப்பட்ட அவருடைய சிலை ஒன்று நிறுவப் படும்.**

**(தமிழ்நாடு சட்டப்பேரவையில் 25.3.1992 அன்று நடைபெற்ற செய்தி-சுற்றுலாத்துறைக் கொள்கை விளக்கக் குறிப்பில்)**

மத்தியக் குழு ஒன்றையும், பத்து மாகாண குழுக்களையும் நிறுவி இந்தியாவின் நிலையை ஆராய அனுமதித்தது. சென்னை மாகாணக் குழுவில் என். சிவராஜ் இடம் பெற்றார்.



பேரறிஞர் அண்ணாவுடன்...

பச்சையப்பன் கல்லூரியில் 1929 பிப்ரவரி 14-இல் சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபையின் பன்னிரெண்டாம் மாநாடு நடை பெற்றது. அம் மாநாட்டிற்கு சிவ ராஜ் தலைமை தாங்கி 1928 ஜனவரி 29- இல் ஆதிதிராவிடர் களின் மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தையும், அதே ஆண் டில் அக்டோபர் மாதத்தில் நடந்த The Madras Provincial Depressed Classes Federation-னின் தலைவ ரான இரட்டைமலை சீனிவாசன் அவர்களால் அளிக்கப்பட்ட அறிக் கையையும், அங்கீகரிக்கச் செய்தார். 1929 பிப்ரவரி 18-இல் சென்னைக்கு வருகை தந்த சைமன் குழுவிடம் இரட்டைமலை சீனிவாசன் மற்றும் ஆதிதிராவிடத் தலைவருடன் சிவ ராஜும் சென்று அக்குழுவை சென்னை மன்றோ சிலைக்கு அருகில் எதிர்கொண்டு வரவேற்று தங்கள் மனுக்களை வழங்கினார்கள்.

இலண்டனில் 1930, 1931, 1932-இல் நடந்தேறிய மூன்று வட்டமேசை மாநாடுகளில், சென்னை மாநிலத்தின் சார்பாக ராவ்பகதூர் ஆர். சீனிவாசன் அவர்களும், பம்பாய் மாநிலத்தின் சார்பாக டாக்டர் அம்பேத்கரும் ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் சமுதா யத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டனர்.

என். சிவராஜ் அவர்களுக்கு இலண்டன் வட்டமேசை மாநாட் டிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் வகுப்பாரின் பிரதிநிதி களாகக் கலந்து கொண்ட ராவ் பகதூர் ஆர் சீனிவாசன் 1930 டிசம்பர் 3-லும், டாக்டர் அம்பேத்கர் 1931 ஜனவரி, 4-லும், 1932 நவம்பர் 9-லும் எழுதிய கடிதங் களில் அவர்களது பணி செம்மை யாக நடைபெறுகிறது என்றும்



ஜின்னாவுடன்...
(இடையில் இருப்பவர் கிரிப்ஸ்)

அதில் வெற்றி பெறுவோம் என்றும் தெரிவித்தார்கள்.

1945-46-இல் என். சிவராஜ் சென்னை மேயராக விளங்கினார். 194 ஜனவரி 29-இல் குடிசைப் பகுதிகளின் முன்னேற்றப் பணிக் காக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான குழுவினை நகரசபையில் உருவாக்கி அதன் தலைவரானார். சென்னை மாநகரில் மதுவிலக்கைத் தீவிரப் படுத்தினார். மாநகராட்சிப் பள்ளி களில் இவர் காலத்தில் கட்டாயக் கல்வி வலியுறுத்தப்பட்டவுடன், பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களா என்பதைக் கண்காணிக்க 4 தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

திரு. என். சிவராஜ், வீணை, சித்தார், ஆர்மோனியமும் நன்றாக வாசிக்கக்கூடிய கலைஞர். மேல் நாட்டு நடனம் ஆடுவதிலும் இசை யிலும் ஆர்வம் கொண்டவர். குதிரைச் சவாரி செய்வதில் வல்ல வர். சென்னை ரேஸ் கிளப்பின் மேலாளராகவும் விளங்கினார். தென் னக விளையாட்டுக் கழகத் தனித் தலைவராகவும் விளங்கினார். **இவர் மேயராக விளங்கிய காலத்தில்தான் 'நேரு விளையாட்டு அரங்கம்' கட்டப்பட்டது.**

1945 டிசம்பர் 25-ந் தேதி மாலையில் சென்னை கர்ன்ஸ்மித் மைதானத்தில் டாக்டர் அம்பேத்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அகில இந்திய செட்யூல்டு வகுப் பினரின் பெடரேஷனின் தேர்தல் கூட்டத்தில் மேயர் என். சிவராஜ்



டாக்டர் அம்பேத்கருடன்...



பண்டித நேருவுடன்...



முன்னாள் குடியரசுத் தலைவா
ஜாகீர் உசேனுடன்...

தலைமை தாங்கினார். டாக்டர் அம்பேத்கரின் ஆங்கில உரையை அக்கூட்டத்தில் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

சென்னைக்குத் தெற்கே செங்கல் பட்டுப் போகும் பாதையில் தாம்பரம் ரெயில் நிலையத்திற்கு மேற்கே பெருவழிப்பாதையை ஒட்டிய இடத்தில் இடத்தில் ஒரு நகரை உருவாக்கி 1946 செப்டம்பர் 1-இல் மேயர் சிவராஜ் அவர்களால் அந்த நகருக்கு 'பெரியார் ராமசாமி நகர்' என்று பெயர் சூட்டப்பட்டது. அந்த விழாவில் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

திரு. என். சிவராஜ் அவர்களுக்குப் பிரிட்டிஷ் அரசு ராவ் சாகிப் என்ற பட்டத்தையும், ராவ் பகதூர் என்ற பட்டத்தையும் வழங்கியது.

1952-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். மீண்டும் 1957-இல் நடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957 முதல் 1962 வரை நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார். 1959 மே 8-இல் சீனா பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

சான்பிரான்சிஸ்கோ, அமெரிக்கா, கனடா, பர்மா, மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்று பல்வேறு மாநாடுகளில் கலந்து கொண்டு, அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூகம் பற்றிய விளக்கங்களைப் பற்றி விவாதித்தார்.

1964 செப்டம்பர் 29-ஆம் நாள் காலை 5.30 மணி அளவில் மாரடைப்பால் காலமானார்.

**கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 121-வது பிறந்த நாளையொட்டி, சென்னைத் துறைமுகம்அருகிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு 5.9.92 அன்று காலை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.**



# மகாகவி பாரதி



## மக்கள் கவிஞர்

சுற்றி வேலி கட்டிக்கொண்டு அந்த எல்லைக் குள் அடங்கி, ஒடுங்கி விடுபவையல்ல பாரதி யாரின் பாக்கள். வேதாந்த தேசியச் சிமிழ்களில் அவற்றை அடைத்து விட முடியாது. புராதன சம்பிரதாயங்களின், கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி, ஆவேசமாக எறி கிறார் அவர் சுடுசொற்களை.

பாரதியை, 'தேசியக்கவி' என அளவுக்கு அதிக மாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டு கிறார்கள் ஒருசாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டு வதன் மூலம், கவிஞரின் மற்றொரு தன்மையை-அதாவது பாரதி மக்கள் கவிஞர் என்ற உண் மையை - மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

—பேரறிஞர் அண்ணா

## உலகக் கவி

பாரதி தமிழ்நாட்டின் கவி மட்டுமல்லர்; அவர் உலகக் கவி. அவருடைய கவிதைகளை எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்க வேண்டும்.

—பண்டித நேரு

## தமிழன் பெற்ற பேறு

மாகாண மொழிகளில், அதாவது வங்காளி, தெலுங்கு, குஜராத்தி, மராத்தி போன்றவற்றினிலே, சென்ற முந்நூறு ஆண்டுகளிலே பாரதியாரைப் போன்ற கவி தோன்றவில்லை. பாரதியார் தமிழ்நாட்டில் திரு அவதாரம் செய்தது தமிழர் களுக்குக் கிடைத்த பாக்கியமாகும்.

—மூதறிஞர் ராஜாஜி

## உலகக் கவிஞர்

பாரதியார் உலகக் கவிஞர், உலகமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழத் தகுந்த உயரிய எண்ணங்களையும், கருத்துக்களையும் அவரது பாடல்களில் காணலாம். பாரதியின் பாடல்களை அச்சில் படிப்பதைவிட, அதனைப் பிறர் உணர்ச்சி யோடு பாடக் கேட்பதால் பெரும் பயன் ஏற்படும்.

—பெருந்தலைவர் காமராஜர்

## வளர்ச்சி

என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு, பாரதியின் தோழமையினால் விளக்குப்போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

—வ.உ.சிதம்பரனார்.

# வாழ்த்துவோம் வணங்குவோம்

**எஸ். நல்லரசு**



செப்டம்பர் - 15!

தமிழ்நாட்டின் வரலாற்றில் இது ஒரு நன்னாள்! பேரறிஞர் அண்ணா பிறந்த பொன்னாள்! நம் கண்ணில் படுவது அண்ணா சிலை! அண்ணா சாலை! அண்ணா சதுக்கம்! அண்ணா மேம்பாலம்! அண்ணா பல்கலைக் கழகம்! அண்ணா மாவட்டம்!

இப்படி எங்கு சென்றாலும் நம் கண்ணிலும் கருத்திலும் நீக்கமற நிறைந்து நிற்கும் அண்ணா, தமிழ் நாட்டின் தலைசிறந்த தலைவராக, தமிழகத்தின் முதல்வராக, தரணி யெங்கும் வாழும் தமிழ் மக்களின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். தமிழ்நாட்டின் பெயரையும் புகழை யும் உலகெல்லாம் பரப்பி உயர்ந் தார்.

'தோன்றிற் புகழோடு தோன்றுக'', என்றார் வள்ளுவர். வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு ஏற்பப்புக ழோடு தோன்றி, புகழோடு வாழ்ந் தவர், தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர் பேரறிஞர் அண்ணா. 1909-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க காஞ்சிபுரத்தில் பிறந்தார்.

தமிழக மக்களின்பால் அவர் பொழிந்த அன்பாலும், அருள் தொண்டாலும் மக்களுக்கு அவர் அண்ணனானார். 'அண்ணா, அண்ணா' என்றே தமிழக மக்கள் அனைவராலும் அழைக்கப்பட்டார்; போற்றப்பட்டார்.

எம்.ஏ. பட்டம் பெற்ற அண்ணா இந்த நாட்டின் வாழ்வுக்கும் வளர்ச் சிக்கும் தன்னை ஒப்படைத்தார். அவர் படித்து முடித்த காலத்தில் பதவிகளெல்லாம் அவரை எதிர் கொண்டு அழைத்தன. படித்த படிப்பை எல்லாம் பதவிக்குப் பாத காணிக்கையாக்கிட அண்ணா விரும்ப வில்லை.

பாராண்ட தமிழினம், 'பாமர ராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டுக்' கிடந்ததைக் கண்டார். சாதிமத பேதங்களால் முட்டி மோதிக் கொண்டு சீரழிந்து கிடந்தது சமு தாயம். வறுமையில் வாடிக்கொண்டு தனது தாழ்நிலைக்குத் தலைவிதிதான் காரணம் என்று மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடந்தனர் மக்கள்.

இந்தச் சமுதாயத்தைத் திருத்தித் தன்மான உணர்வூட்டி, பழம் பெருமை மீட்டித் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்திட தனது வாழ்வை அர்ப்பணித்தார். ஈரோட்டுச் சிங்கம், சீர்திருத்தச் செம்மல், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைத் தம் தலைவராகக் கொண்டார்.

தந்தை பெரியார் அண்ணாவுக் குத் தலைவர்; அனைவருக்கும் பெரியார். அவருடைய பிறந்த நாள் அடுத்து வருகிறது செப்டம்பர் 17-இல். தந்தையும் தனயனுமாய் இலட்சியத்தால் பிணைந்த இருவரது பிறந்த நாளும் இணைந்து வருகின் றன ஒரே வாரத்தில்.

பாவலர் பாராட்ட, காவலர் தாலாட்ட, கற்றறிந்தோர் சீராட்ட வளர்ந்த தமிழுக்கும், பத்தாக, எட்டாக, பதினெட்டாகப் பல்கிப் பெருகிய இலக்கியங்களுக்கும் சொந்தக்காரர்களான தமிழர்கள் தலைகுனிந்து கிடந்ததை அண்ணா கண்டார். தமது பேச்சையும் மூச் சையும் எண்ணத்தையும் எழுத்தை யும் தமிழ்நாட்டுக்கே அர்ப்பணித் தார்.

'ஏ' தாழ்ந்த தமிழகமே! தன்னை மறந்த தமிழகமே' என்று கூவித் தமிழகத்தைத் தட்டி எழுப்பினார்.

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நுழைந்து மாணவர்களிடம் தமது சொல்லாற்றலால் கருத்துப்புரட்சி செய்தார். அவரது பேச்சுக்கும் எழுத்துக்கும் இருந்த காந்த சக்தி இளைஞர் சமுதாயத்தை ஈர்த்தது. மூத்த சமுதாயத்தைத் திருத்தியது. மாணவர்களும் - இளைஞர்களும் அண்ணாவின் சுட்டு விரல் ஆணைக்குப் பணிந்து நின்றனர்.

படித்தவர்கள், பட்டதாரிகள் முதல் பாமரர் வரை அண்ணாவைப் பின் தொடர்ந்தனர். அவரையே நம்பினர். அண்ணா முதலமைச்சர் ஆனார்.

ஆட்சியில் அமர்ந்த அண்ணா,

ஏழைகளை வாழவைக்கத் திட்டம் தந்தார். முதன்முறையாக வரியில்லாத வரவு - செலவுத் திட்டத்தைத் தந்தார்.

வறுமையில் வாடிய ஏழைகளுக்கு வயிற்றுக்கு உணவு தந்தார். படியரிசித் திட்டம் தந்து பாமரரை வாழவைத்தார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே-ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே''

என்று பாடினார் பாரதியார்.

ஆனால், அந்தச் செந்தமிழ்நாடு சொந்தப் பெயர் இல்லாமலே 'சென்னை மாகாணம்' என்ற வேறொரு பெயரைத் தாங்கி நின்றது. இந்த இழிநிலையை மாற்றித் 'தமிழ்நாடு' எனும் இனிய பெயரைத் தமது அமுதவாயால் தமிழ் மண்ணுக்குச் சூட்டி, தரணிக்கு நம் தமிழ்நாட்டை அறிமுகப்படுத்தினார். தமிழனைத் தலைநிமிரச் செய்தார் அண்ணா.

தீண்டாமை ஒழிப்பிலே தீவிரம் காட்டிய அண்ணா, சாதிக் கொடுமைக்கு முடிவுகட்ட கலப்புத் திருமணத்திற்கு அரசாங்கமே பரிசு வழங்கிடும் அரிய திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இந்தியாவில் வேறு எங்கும் நடந்திராத புதுமை இது. இதனால் தாழ்த்தப்பட்டோர் தலைநிமிர்ந்தனர். தன்மானம் பெற்றனர்.

அண்ணாவின் அறிவாற்றலைப் பாராட்டி, அமெரிக்காவிலுள்ள 'ஏல்' (Yale University) பல்கலைக் கழகம் அண்ணாவை அழைத்துச் சிறப்புப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. முன்பெல்லாம் இந்தச் சிறப்புப் பட்டம் அமெரிக்கர்களுக்கு மட்டுமே கிடைத்தது. இந்தச் சிறப்புப் பட்டத்தைப் பெற்ற முதல் வெளிநாட்டவர் அண்ணாதான்.

தாம் பட்டம் பெற்றது மட்டுமல்ல, அந்தப் புகழ்மிக்க பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்தி, குறளின் பெருமையை தமது ஆங்கிலப் புலமை மூலம் எடுத்துரைத்தார்.

தமிழ் மக்கள் வாழ்வு சிறக்க, தமிழ்நாட்டின் பெருமை பாரெங்கும் பரவிடத் தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றிய அண்ணா புற்று நோயால் பாதிக்கப்பட்டார். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உடல் நலிந்தது.

தமிழ் மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் விழா நடந்தது. அந்த விழாவில் கலந்து கொண்டால் உடல் மேலும் மோசமடையும். உயிருக்கு ஆபத்து என்று கூறி மருத்துவர்கள் தடுத்தனர். ஆனால், "எது வாழ்வின் இலட்சியம் நிறைவேறும் இந்த விழாவில் கலந்து கொள்ளப் பயன்படாத உயிர் எனக்குத் தேவையில்லை'', என்று சொல்லிவிட்டு, விழாவில் அண்ணா கலந்து கொண்டார். தமிழ்நாடு என்ற பெயரைத் தந்தார். அதற்காகத் தம் வாழ்வையும் தந்தார்.

அண்ணா தலைசிறந்த பேச்சாளர், எண்ணற்ற பேச்சாளர்களை உருவாக்கினார். ஒப்பற்ற எழுத்தாளர், எழுத்தாளர் பரம்பரையையே உருவாக்கினார்.

அவர் ஒரு புதிய தமிழ் நடையைத் தந்தார். தமிழ் மேடைக்கு உயிரூட்டினார். அண்ணா இல்லையேல் தமிழ் இல்லை. தமிழ்நாடு இல்லை; தமிழருக்குத் தன்மான வாழ்வும் இல்லை.

தமிழின் மூச்சாய், தமிழரின் மூச்சாய் இருந்த அண்ணா 1969 பிப்ரவரி - 3-ஆம் நாள் மறைந்தார். தமிழகம் துயரத்தில் மூழ்கியது.

'நடக்கக் கூடாதது நடந்து விட்டது. நாட்டில் இருள் சூழ்ந்து விட்டது', என்று கூறித் தந்தை பெரியார் வேதனைப்பட்டார்.

அண்ணாவின் இறுதி ஊர்வலத்தில் அண்ணாவின் உடலைக் காணவும். வணங்கவும் திரண்டதைப் போன்ற பெருங்கூட்டம் உலக வரலாற்றில் வேறு எந்த இறுதி ஊர்வலத்திலும் எங்கும் எப்போதும் திரண்டதில்லை என கின்னஸ் புத்தகம் கணக்கெடுத்துக் கூறுகிறது. (கின்னஸ் புத்தகம் 1984).

தமிழுக்குத் தொண்டு செய்து
சிறைக்குச் சென்றோன்
தலைசிறந்த பேச்சு வல்லோன்;
தமிழன், வீரன்;
தமதென்றும் தமரென்றும்
பார்ப்பதன்றித் தமிழ்நாட்டின்
நலத்தினுக்கே.

'உயிர், உடல் அமைகவென உழைக்கும் மேலோன்!' என்று பாவேந்தர் பாரதிதாசன் அண்ணாவைப் பற்றிப் பாடினார்.

தமிழுக்காகவும், தமிழர் வாழ்வுக்காகவும் உயிரையும் உடலையும் தந்து உழைத்தவர் அண்ணா. அவர் வளர்த்த தமிழால், அவர் தந்த தமிழால், அவர் காத்த தமிழால் அவரை வாழ்த்துவோம்; வணங்குவோம்; அவர் வழி நிற்போம்.



வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெறவேண்டுமானால், சலியாத உழைப்பும், தளராத ஊக்கமும், விடா முயற்சியும் மிகமிக அவசியமாகும்.

- பேரறிஞர் அண்ணா.

# டாக்டர் இராதாகிருஷ்ணன்



ஒடிசலான உடலும், திண்ணிய நெஞ்சமும், கீழே பஞ்சகச்சமும் மேலே கோட்டும், தலையில் வெள்ளைத் தலைப்பாகையுமான தோற்றம் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்குச் சொந்தம். அமைதியான-அதே சமயத்தில் ஆழ்ந்த அழுத்தமான சொற்பொழிவாற்றல் மிக்கவர் அவர். தாய்மொழி தெலுங்கானாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவ்வம் மொழிப் பண்டிதர்களே வியக்கும்படியான சொல்லாட்சி அவருடையது.

அவரது முன்னோர்கள், சர்வபள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். நடுத்தரக் குடும்பமொன்றின் தலைவரான திரு. வீராசாமி என்பார், பிழைப்புத் தேடி, முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் வந்து குடியேறினார். அவருக்கு ஐந்து பிள்ளைகள்; ஒரே பெண். அவர்களில் இரண்டாவது மகனாக 1888ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி பிறந்தவர்தான் நமது டாக்டர் இராதாகிருஷ்ணன்.

வருங்காலத்தில் தலைசிறந்த தத்துவஞானியாகவோ, எதிர்கால இந்தியாவின் குடியரசுத் தலைவராகவோ தமது மகன் விளங்கப் போகிறார் என்று அந்தத் தந்தைக்குத் தெரியாது. தாமே தன் அன்பு மகனுக்கு ஆரம்பக் கல்வியைப் போதித்தார். பன்னிரண்டு வயதிற்கு மேலேதான் அவர் பள்ளியிலேயே சேர்க்கப்பட்டார். தந்தையார் மூலமே வடமொழியறிவும் வாய்க்கப்பட்ட அவர், கிறிஸ்துவக் கல்விக் கூடங்களில் படித்ததால் அந்த மதம் பற்றியும் இளமையிலேயே ஏராளமாகத் தெரிந்து கொண்டார். கிறிஸ்துவ வேதமான பைபிளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார்,

திருத்தணியில் பள்ளிப் படிப்பு முடிந்தது. கல்லூரிப் படிப்பு, வேலூர் ஊரிசுக் கல்லூரியில் தொடர்ந்தது. அங்கே எஃப்.ஏ. படிப்பு முடிந்ததும், சென்னையில் உள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் தத்துவப் படிப்பு அவரை ஆட்கொண்டது. இதற்கு இராதாகிருஷ்ணனைத் தூண்டியவர், அவரது சித்தப்பா மகனேயாவார். எம்.ஏ வகுப்பிலும் தத்துவப் படிப்பை மேற்கொண்ட அவரை, அப்போது சுவாமி விவேகானந்தரின் விவேகம் மிக்க ஆன்மீகச் சொற்பொழிவுகள் அதிகம் கவர்ந்தன. வேதாந்தம் பயில விரும்பிய அவர், அத்துவைதத் தத்துவத்தை ஆழ்ந்து கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

கல்லூரி வாழ்வு தொடங்கு முன்பே, அக்கால வழக்கப்படி அவர் இல்லறவாசியாக்கப்பட்டு விட்டார். ஆம், அவருக்குப் பால்யப் பருவத்திலேயே திருமணம் முடிந்து விட்டது.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் முதன் முதலாக அவருக்குத் தர்க்க இயல் (Logic) துணைப் பேராசிரியர் வேலை கிடைத்தது. கல்விக் கண் திறக்கும் ஆசிரியர் பணியே சிறந்தது என்று முடிவெடுத்துக் கொண்ட அவர் சென்னை-சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து எல்.டி. பட்டம் பெற்றார்.

அதன் பின்னால், பிரஸிடென்சி கல்லூரியில் தர்க்க இயல் பேராசிரியர் பதவியே அவருக்கு அளிக்கப்பட்டது.

அவர் தயாரிக்கும் கட்டுரைகளும், ஆற்றும் சொற்பொழிவுகளும் மாணவர்களை மட்டுமல்ல; பேராசிரியர்களையும் வியந்து பெருமூச்செறிய வைப்பவைகளாக இருந்தன. எனவே, மாணவர்கள் மட்டுமன்றி, பேராசிரியப் பெருமக்களும் அவ்வப்போது அவரை அணுகிப் படிப்புத் தொடர்பான ஐயம் நீக்கிக் கொள்வாராயினர்.

அதன்பின், ராஜமகேந்திரத்தில் உள்ள கலைக் கல்லூரியில் அவர் தத்துவ விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பிறகு, மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் தத்துவநூற் பேராசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், மிகச் சிறந்த கற்றறிவாளரான இராதாகிருஷ்ணனைத் தமது தத்துவப் போதகப் பேராசிரியராகக் கொண்டு கல்கத்தா பல்கலைக் கழகம் பெருமை பெற்றது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமும், மான்செஸ்டர் கல்லூரியும் - மற்றும் உலகெங்கும் உள்ள பிரசித்தி பெற்ற கல்வியமைப்புகளும் ஆர்வத்தோடு அவரை அழைத்து அறிவார்ந்த சொற்பொழிவாற்றச் செய்து சிறப்பித்தன; சிறப்புற்றன.

நாளடைவில் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான அவர், ஐந்தாண்டுக் காலத்திலேயே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று, அங்கு சென்று ஒரு பிரிவின் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். கல்கத்தா பல்கலைக் கழகப் பேராசிரியர் பதவியை மீண்டும் ஒப்புக் கொண்டு உயர்வுற்றார். மிகச் சிறந்த கல்விமான் ஆன அவரை நோக்கி, காசிப் பல்கலைக் கழகம் துணைவேந்தராக வரும்படி நேசக்கரம் நீட்டியது. மிகப்

பெருந்தொகையை அதற்கான ஊதியமாகத் தர அவர்கள் இசைந்தார்கள். ஆனால், டாக்டர் இராதாகிருஷ்ணனனோ அதற்கு முழுமையாகச் சென்றுவிட இயலாத நிலையில், துணைவேந்தரின் கௌரவப் பதவியை மட்டும் வகிப்பதாக இசைவளித்தார்.

இதற்கிடையே பல்வேறு ஆராய்ச்சிக் கழகங்களுக்கும் அவர் தலைமை தாங்கிப் பெருமை கொண்டார். சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற பல்வேறு நாடுகளும் அவரது திறமையை உணர்ந்து அவரை அழைத்துத் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்து அறிவு வளம் பெற்றன.

மேனாட்டில் போய்ப் படித்து விட்டு வந்தால் தான் மேதைமையடைய முடியும் என்ற நிலையை முற்றிலும் மாற்றிக் காட்டிய பெருமை இராதாகிருஷ்ணனுடையதாகும். இந்தியாவிலேயே படித்து மேதைமை கொண்ட அவரை மேனாடுகளெல்லாம் விரும்பியழைத்துப் பாராட்டிப் பெருமை கொண்டன.

இந்து மதத்தைப் போலவே புத்த மதத்தையும் ஆராய்ந்து, இரண்டிலும் உபநிடதக் கொள்கைகளே பரவலாகக் காணப்படுகின்றன என்று அறிவித்த சிறப்பினர் அவர்.

இவ்வாறெல்லாம் இந்தியாவின் புகழை உலக அரங்கில் ஓங்கி நிற்கச் செய்த அவருக்கு, 1952-இல் இந்நாட்டின் உதவிக் குடியரசுத் தலைவர் பதவி கிடைத்தது. அதற்கடுத்த சில காலத்திலேயே 'பாரத ரத்னா' விருது அவருக்கு அளிக்கப்பட்டது.

1962-இல் இந்தியாவின் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் இராதாகிருஷ்ணன், 1967-இல் அப்பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

பல்வேறு மதங்கள், மொழிகள் பற்றி ஆராய்ச்சியிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். உலகப் பல்கலைக் கழகங்கள் பலவும் அன்னாருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தன. இப்படி அவர் பெற்ற டாக்டர் பட்டங்களின் எண்ணிக்கை மட்டும் 133 ஆகும். 'டெம்பிள்டன் நிறுவனத்தார்' அவருக்கு 96 ஆயிரம் டாலர் மதிப்புள்ள பெரும் பரிசு ஒன்றையே வழங்கிக் கௌரவித்தார்கள்.

இந்தியத் தத்துவத்திலும் ஆன்மீக வளர்ச்சியிலும் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு எண்ணற்ற கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும் ஆக்கிச் சான்றோர்க்குள்ளே சுடர்விட்டுப் பிரகாசித்தார் அவர். முப்பதுக்கும் மேலான அரிய நூல்களை எழுதினார். பெண் கல்வி முன்னேற்றத்திற்காக அவர் பெருமுயற்சி மேற்கொண்டார்.

அனைத்துலகிலும் தம் காலடி படாத, உரைகேட்டு உவக்காத முக்கிய நாடுகளே இல்லை என்ற அளவுக்குப் புகழ் பெற்றிருந்த சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 1950-இல், இந்தியத் தூதராக ரஷ்ய நாட்டிலும் இருந்தவர். ஸ்டாலினாலேயே அப்போது புகழ்ந்து பேசப்பட்டவரும் கூட.

தன்னிகரற்ற தத்துவ மேதையான அவர் தமது 86-ஆம் வயதில் 17.4.1975 அன்று, உடல் நலம்குன்றி இயற்கை எய்தினார்.

— பி.எல்.ஆர்.



## சென்னைக் கடற்கரையை அழகுபடுத்த முதல்வர் உத்தரவு

சென்னை மாநகரை எழில் மிகுந்த நகரமாக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்பேரில் ரூ.1,500 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னையிலுள்ள மெரீனா கடற்கரையை அழகுபடுத்த 2 கோடி ரூபாயும், எலியட்ஸ் கடற்கரையை அழகு படுத்த 1.5 கோடி ரூபாயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியுள்ளார். இந்தப் பணிகள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருவதாக, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள், அண்மையில் சென்னை மெரீனா கடற்கரையில் துப்புரவுப் பணிகளைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் இதைத் தெரிவித்தார்.

சென்னை நகரின் சாலைகள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் இவ்வாண்டு சுமார் 20 ஆயிரம் மரக்கன்றுகளை நட மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. சென்னை நகரிலிருந்து மட்டும் சுமார் 2 ஆயிரம் டன் குப்பை அன்றாடம் அகற்றப்படுகிறது.

# கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள்

சின்னஞ்சிறிய விரல்கள் படைக்கும் சித்திர விசித்திரங்கள் சிந்தைக்கு விருந்தாய் அமைகின்றன.

கண்கவரும் அந்தக் காட்சிப் பொருள்கள், கைவினைஞர்களின் கைவண்ணத்தைக் காட்டுகின்றன.

கல்லும், மண்ணும், காகிதமும், துணியும், உலோகமும் கைவினைஞரின் கைபட்டதும், உருவகம் பெறுகின்றன. நம் உள்ளத்தைக் கவருகின்றன.

இவ்வாறு உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் வகையிலே, சென்னை நகரிலே பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் பல இடங்களிலே நடைபெற்று வருகின்றன. அவற்றுள் காதிகிராப்ட் பொம்மைக் கண்காட்சியும், சென்னை அண்ணாசாலையில் நடைபெறும் காதி கிராமோத்யோக் பவன் பொம்மைக் கண்காட்சியும் குறிப்பிடத்தக்கவை.

காதி கிராப்டில்

மாலை நேரம்!

ஆடவர், மகளிர், குழந்தைகள் என்று கூட்டம் அலைமோதுகிறது.

சிறிய, பெரிய பொம்மைகள் அங்கே காட்சியளிக்கின்றன.



வழக்கம்போல் இந்த ஆண்டும், அழகிய பொம்மைகள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

கடவுளர் திருவுருவங்கள், தலைவர்கள், மரங்கள், பறவைகள் முதலான பொம்மைகள் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தன. மெல்லிய கண்ணாடிக் குழாயிலிருந்து நுணுக்கத்தோடு தயாரிக்கப்பட்ட பொம்மைகளும் கண்காட்சியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, பொம்மைகள் சென்னை கொசப்பேட்டை, கடலூர், பண்ருட்டி, விழுப்புரம் பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

இந்தக் கண்காட்சியில் ரூபாய் இரண்டிலிருந்து, ரூபாய் இரண்டாயிரம் வரை பொம்மைகளை வாங்கலாம்.

தமிழ்நாடு, தொன்மையான மட்பாண்டத் தொழிலுக்கும், சிறப்பான கலைவேலைப்பாடுகளுக்கும் பெயர் பெற்றதாகும் என்பது நாமறிந்ததே. கலைநுட்பம் வாய்ந்த அழகிய பூந்தொட்டிகள், கலைநயம் மிக்க தண்ணீர் ஜாடிகள், டெரகோட்டா பொம்மைகள், வழவழப்பான நவீன மட்பாண்டங்கள், நமது பண்டைய கலாச்சாரத்தை விளக்கும் பல்வகைப் பொம்மைகள், மெழுகினால் தயாரான பொம்மைகள், ஏழைகளின் குளிர் சாதனப் பெட்டிகள் ஆகியவை இங்கே கிடைக்கின்றன.



தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கடந்த 32 ஆண்டுகளாக மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர, பல்வேறு நலத்திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகின்றது. வாரியத்தின் 4 அலகுகள் மூலமாகவும், 112 மட்பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், மட்பாண்டத் தொழில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் 12,473 மட்பாண்டத் தொழிலாளர்கள் அவர்கள் சொந்தமாகத் தொழில் செய்ய வாரியம் நிதி உதவி அளித்துள்ளது. 1991-92- ஆம் ஆண்டில் வாரியம் ரூ.14.61 கோடிக்கு மட்பாண்டப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழ்நாட்டில் 89,864 மட்பாண்டக் கைவினைஞர்களுக்கு, வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 38,000 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.

நவராத்திரிப் பொம்மைக் கண்காட்சிக் காலங்களில் இக்கதர்



அங்காடியில் அதிக அளவில் பொம்மைகள் விற்பனையாவதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏழை, எளிய கைவினைஞர்கள் பயனடைகின்றனர்.

மின் விசையுடன் இயக்கக்கூடிய நவீன ஷீலா சக்கரம், முன்னேற்றமடைந்துள்ள மட்பாண்டச் சக்கரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவற்றில் அதிக அளவில் பல்வேறு மட்பாண்டப் பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு வசதியாக, சென்னைக்கு அருகில் உள்ள செவ்வாய்ப்பேட்டையில், ஒரு மண்டல மட்பாண்டப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய தென் மாநிலங்களில் உள்ள மட்பாண்டக் கைவினைஞர்களுக்கு இங்கு 5 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது ஒவ்வொருவருக்கும் ரூ.350 உதவித் தொகையும் பயணப்படிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் தொழில் செய்யும் மட்பாண்டக் கைவினைஞர்கள் அப்பகுதியிலேயே பயன்பெறும் வகையில், 4 இடங்களில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

உற்பத்தி அலகுகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கைவினைஞர்கள் மூலம் உற்பத்தியாகும் பொம்மைகள் ஆண்டு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வந்தாலும், பெரும் அளவு விற்பனை நவராத்திரி விழாக் காலத்தில் தான் நடைபெறுகிறது.

களிமண் பொம்மைகள், காகிதப் பொம்மைகள் போன்றவை மிக அதிக அளவில் இங்கு விற்பனையாகும் பொம்மை வகைகளாகும்.

மேற்கு வங்காளம், கோலாப்பூர், கேரளா, ஆந்திரா முதலிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து புதிதாகப் பொம்மைகள் வரவழைக்கப்பட்டு, இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இத்தகைய கலைவேலைப்பாடு மிகுந்த பொம்மைகள், கைவினைஞர்களிடமிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் ஏராளமான அளவில் வாங்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. கலை அழகு, தரம் மட்டுமல்லாது நியாயமான விலையிலும் பொம்மைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் இங்கு விற்பனை பன்மடங்கு அதிகரித்து வருவதே இதற்குச் சான்றாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் நவராத்திரிக் கொலுக் கண்காட்சிக் காலங்களில் அதாவது 1990-இல் ரூ.18.10 இலட்சத்துக்கும், 1991-இல் ரூ.22.50 இலட்சத்துக்கும் பொம்மைகள் விற்பனை ஆயின.

இவ்வாண்டு நவராத்திரிக் கொலுக் காலத்தில் பொம்மைகள் ரூ.30 இலட்சத்திற்கு விற்பனை ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.







போன்ற பொம்மைக் கண்காட்சிகள் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது.

இந்த ஆண்டு, காதி பவன் பொம்மைக் கொலுவில், புதிய வகைகளாக மகளிர் பூப்பந்தாட்டம், முதியோர் கல்வி, அகத்தியர் காவேரி, மண் உண்ட கண்ணன், யசோதை- தயிர் கடைதல், வசுதேவர், இலட்சுமி நரசிம்மர், பகீரதன் பிரயத்தனம், லிங்கோத்தரன், வரம் தரும் தேவியர், பழக்கடை, காய்கறிக் கடை, அரிசிக்கடை ஆகியவை இடம் பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு, பொம்மைக் கண்காட்சி மூலம் ரூ.4.40 இலட்சம் விற்பனை நடந்தது. இவ்வாண்டு, ரூ.5.50 இலட்சம் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது நடைபெறுகிற இக்கண்காட்சியில் ரூ.1 முதல், ரூ.8,000 வரையிலான விலையில் பொம்மைகள் உள்ளன.

மரத்தாலான வேலைப்பாடு உள்ள விநாயகர் (இதன் விலை ரூ.8008), திருப்பதி வெங்கடாசலபதி, சமயபுரம் மாரியம்மன், இலட்சுமி நரசிம்மர் முதலான பொம்மைகள் காட்சியில் இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

—பொ. மறைமலை

## காதி பவனில்

சென்னை அண்ணாசாலையில் உள்ள காதி கிராமோத்யோக் பவனில் பொம்மைக் கொலு தொடங்கப்பட்டுள்ளது.

கண்ணைக் கவரும் வகையிலே வண்ணப் பொம்மைகள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

வகை வகையான பொம்மைகளைப் பார்க்கும்போது, எல்லாவற்றையும் வாங்க வேண்டும் போல் தோன்றுகிறது.

கடவுளர் சிலைகள் முதல் காய்கறி, பழங்கள் வரை மிக நேர்த்தியாக, கலை நுட்பத்துடன் செய்யப்பட்டிருக்கிற பாங்கைக் கண்டு மகிழலாம்.

கிராமப்புற ஏழை எளியோர் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட, இது






உன்னைக் குடிக்கும் மதுவைக் குடித்தால்
உலகம் உனக்குச் சுடுகாடு!
உண்மையைச் சொன்னால் உயிரிருந் தும்நீ
உலவித் திரியும் வெறுங்கூடு!

விலங்காய் உன்னை விரைவினில் ஆக்கும்
விசித்திரத் திராவகம் மதுவாகும்
வெட்கம் மானம் எல்லாம் போக்கும்
வெறியின் திரவம் அதுவாகும்!

கட்டிய மனைவியின் உயிரைத் தின்னும்
காலன் தானே குடிகாரன்!
கட்டிக் கரும்பாம் குழந்தையின் ரத்தம்
களிப்புடன் உறிஞ்சும் சதிகாரன்!

மதுவின் கோப்பையை மண்ணில் எறிந்தால்
மக்கள் இனத்தில் நீஒருவன்
மாட்டேன் என்றால் மரணக் கோட்டையின்
மதிலைத் தாவும் பெருமடையன்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





முன்னாள் மேயர் திரு. என். சிவராஜ்
(29.9.1892 — 29.9.1964)